தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/=
இதழ் - 94
26.01.2025

# குலை குலையாய் முந்திரிக்காய் (மரமுந்திரிகை பயிர்ச்செய்கை)



இந்தியா–இலங்கை வரி, வணிக மற்றும் தொழில் ஒத்துழைப்பிற்கான புதிய பரிமாணங்கள் 10

குடும்ப பொருளாதாரம் 12

பலரின் பொருளாதாரத்தை உலுக்கி போட்ட காட்டு தீ 17

காரைநகர் பட்டறை 18

பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# முயற்சியாளர்களுக்கு அவசியமான 5 திறன்கள்




இலங்கையில், இன்றைய நிலையில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்களிலொன்று, முயற்சியாண்மைவளர்ச்சியும்வெற்றிகரமான முயற்சியாண்மை வணிகமுமாகும்.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைப் பொறுத்த வரையில், முயற்சியாளர்களின் வளர்ச்சி யென்பது,மிகமிகஅவசியமானதாகஉள்ளது. காரணம், பல்தேசிய நிறுவனங்கள் மற்றும் அரசநிறுவனங்களால்உருவாக்கமுடியாத புதிய தொழிற்றுறை வணிகத்தையும் வேலைவாய்ப்பையும்,தொடக்கநிலைவணிக முயற்சியாளர்களால் உருவாக்கமுடியும் என்பதே!

அவ்வாறு உருவாகும் அல்லது உருவாக்கப்படும்முயற்சியாளர்கள், சந்தை போட்டியில்தோல்வியடையாத வகையில், தமது திறன்களை வளர்த்துக்கொள்ளுவது அவசியமாகிறது. அவ்வாறான திறன்கள், பலவாக உள்ளபோதும், கீழ்வரும் 5 திறன்களும், ஒரு முயற்சியாளர், தன்னை போட்டிமிகுந்தஉலகத்தில், வெற்றியாளராக நிலைநிறுத்திக் கொள்ளுவதில், முக்கிய இடத்தினை வகிக்கின்றன.

## அபாயநேர்வைக் கணக்கிட்டுச்செயற்படல் (Takes calculated risks)

ஒருமுயற்சியாளருக்கு இருக்கவேண்டிய மிக அடிப்படையான தகுதியும் ஏனையவர் களுக்குமிடையிலான வேறுபாடே, துணிந்து அபாயநேர்வை எதிர்கொள்ளுதலாகும். சந்தையில் இல்லாத, சந்தைக்குத் தேவையானபுதியமுயற்சிகளைத்துணிந்தே செயற்படுத்தக் கூடிய தீர்மானங்கள்தான், என்றுமே முயற்சியாளர்களை வெற்றியாளர்களாக மாற்றியமைக்கும்.

உதாரணமாக, 2011ஆம் ஆண்டு வரை, இலங்கையின் மிகப்பெரும் வர்த்தகத்துறையானது, இணையப் பின்னணியை, பெரிதும் கொண்டிருக் கவில்லை. பெரும்பாலும், சர்வதேச வலைப்பின்னலான, சி-யுழிதீ போன்ற தளங்களும் இதர சில உள்நாட்டு தளங்களுமே, ஒட்டுமொத்த வர்த்தகச் சந்தையின் சிறுபகுதியை, இணையம் மூலமாக ஆக்கிரமித்திருந்தன. குறித்த சமயத்தில், முயற்சியாளர் ஒருவரினால், புஜதீமிஜுஷ்ஜஆ.யிவ (தற்போதுநிநுநி. யிவ) இணையதளமானது, தனிநபர் ஒருவர், சந்தை பெறுதியிலும் பார்க்கக் குறைவான விலையில், பொருட்களை வீட்டிலிருந்தே கொள்வனவு செய்யக்கூடிய புதிய முறையினைஅறிமுகப்படுத்தியிருந்தது.இது, துணிகரமாக, மக்களைக் குறித்த இணைய கொள்வனவுமுறைக்கு பழக்கப்படுத்துகின்ற ஒரு அபாயநேர்வு முயற்சியாகும். ஆனால், அதனை நிகழ்த்திக் காட்ட முடியும் என்பதனை,ஏனையபோட்டியாளர்களிருந்து வேறுபடுத்திக் காட்டியதன் மூலமே, குறித்த வணிகம் வெற்றிகரமாக, இன்றும் இயங்கிக் கொண்டுள்ளது.

இது, ஒரு முயற்சியாளர், சந்தையில் தனது அபாய நேர்வுகளைப் பொருத்தமான வகையில் கணக்கிட்டு, அதற்கேற்ப, தனது முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதன் மூலமாக, சந்தையில் வெற்றியாளராகச் செயல்பட முடியும் என்பதற்கான சிறந்த எடுத்து காட்டாக உள்ளது.

## தோல்விகளிலிருந்து கற்றுகொள்ளுதல் (Learns from failure)

போட்டிமிகுந்த வர்த்தக உலகில் எவரும், எதனையுமே 100% சரியாக செய்வதில்லை. இது, யாருக்கு சரியாகப் பொருந்துகிறதோ இல்லையோ, வணிக உலகில் உள்ளவர்களுக்கும் முயற்சியா ளர்களுக்கும், சரியாகப் பொருந்தும்.

முயற்சிகள் எடுக்கின்ற அனைத்து சந்தர்ப்பங்களுமே, தோல்வியில் முடியக்கூடும். ஆனால், அதனைத் தோல்விகளாக மட்டுமே பார்க்காமல், அதிலிருந்து எதனைக் கற்றுக்கொள்ள முடியும்என்றுபார்க்கின்றமனப்பான்மையை, வளர்த்துக்கொள்ள வேண்டும். இல்லை யெனில், மீண்டும் ஒருமுறை முயற்சி செய்யும்போது, புதியபாதையில்வெற்றியை நோக்கிச் செல்வது கடினமானதாக மாறிவிடும். வணிகங்கள் எப்போதுமே, ஒரு சதுரங்க விளையாட்டுக்கு ஒப்பானதாகவே அமைந்திருக்கும். தவறுகளிலிருந்து மிகவிரைவாக கற்றுக்கொண்டு, மீளவும் ஆரம்பிக்காவிட்டால், சதுரங்கத்தில் எப்படி தோற்றுபோவோமோ, அதுபோலத்தான் வணிக முயற்சிகளும் அமைந்திருக்கும். எனவே தோல்வியை, வெறும் தோல்வியாக மட்டுமே பார்க்காமல், அதிலிருந்து வெற்றிக்கு எது தேவையானது என்பதனை எடுத்துக்கொள்ளுவது அவசியமாகிறது.

## கனவுகளைப் பெரிதாகக் காணுதல் (Sees the bigger picture)

ஒரு முயற்சியாளரின் எண்ணங்களும் இலக்குகளும் நடைமுறைக்கு சாத்தியமானதாகவே இருக்கவேண்டும். ஆனால், அதனுடைய அர்த்தம் தனது இயலுமைக்குள்மாத்திரம்முயற்சியாளர்கள் தங்களை மட்டுபடுத்திக்கொண்டு வணிகக் கனவை அல்லது இலட்சியத்தை கொண்டிருக்கவேண்டும் என்பதல்ல. மாறாக, வணிக வெற்றியும் அவ்வெற்றிகள் தூரநோக்கில் எவ்வாறான பலாபலனை ஏற்படுத்தித்தரபோகின்றது என்பதனையும் கொண்டதாக இருக்கவேண்டும்.

இன்றைய நிலையில், இலங்கையில் மிகப்பெரும்வெற்றிகரமானவணிகங்களாக உருவெடுத்து நிற்கும் எந்தவொரு வணிகத்தினதும் ஆரம்ப நாட்களை எண்ணிப்பாருங்கள். அவை, ஆரம்பித்த புள்ளிக்கும்,தற்போதையநிலைக்குமிடையில் இமாலய இடைவெளி இருக்கும். இது எப்படி சாத்தியமானது என சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? இந்த வணிகத்தின் வெற்றிச்செயன்முறைஎவ்வாறுஇடம்பெற்றது என ஆராய்ந்து இருக்கிறீர்களா ?

ஒவ்வொரு வணிகத்தின் பின்னாலும் அதன் ஒவ்வொரு வெற்றிக்கு பின்னரும், அடுத்த இலக்கை நோக்கி நம்மால் பயணிக்க முடியும் என்று நம்பிக்கையூட்டும் முயற்சியாளர்களாலேயே இது சாத்தியமாகியிருக்கும்.

அதுபோலதான், தற்போது ஒரு புள்ளியில் ஆரம்பிக்கும் முயற்சியாளர்களும், அவர்களது வணிகங்களும் விருட்சமாக வளர்ந்து நிற்க, அவர்களது கனவுகளுக்கும் இலக்குகளுக்கும் முட்டுக்கட்டை போடக்கூடாது.

### புத்தி சாதுர்யமாக பொறுப்பினைப் பகிர்தல் (Delegates wisely)

முயற்சியாளர்களின் மிகப்பெரிய பலவீனமே, அவர்களது கனவுக்கு, அவர்களே சகலவகையிலும் நிஜ உலகில் உருக்கொடுக்க வேண்டும் என நினைப்பதாகும். இது, ஒவ்வொரு முயற்சியாளர்களுக்கும் பணிச்சுமையை அதிகரிப்பதுடன், ஒரு எல்லைக்கு அப்பால் தமது கனவுகளை புதுப்பித்துக்கொள்ள முடியாது போகவும் செய்கிறது. இது, சந்தைப் போட்டிக்கு அமைவாக, முயற்சியாளர் தன்னை புதுப்பித்துக்கொள்ள முடியாமல், சந்தையை விட்டு ஒரங்கட்டப்பட வேண்டிய நிலையை ஏற்படுத்தி விடுகிறது.

எனவேதான், முயற்சியாளர்கள் தனது இலக்கினை அடைந்து கொள்ளக்கூடிய வகையில், அனைத்து செயல்பாடுகளையும், பொருத்தமான திறமையாளர்களை இனங்கண்டு புத்திசாதுர்யமாக பகிர்ந்து அளிக்கவேண்டியது அவசியமாகிறது. இதன் மூலம், முயற்சியாளர் ஒருவருக்கு வணிகத்தினை நிர்வகிக்க, மேலதிக நேரம் கிடைப்பதுடன், குறித்த வணிகத்தை மேலும் அழுத்தமற்ற வகையில் விருத்தியடைய வைக்கவும் உதவுகிறது.

இதன் காரணமாகத்தான் பெரும்பாலான வணிகங்களில், முயற்சியாளர்கள் அல்லது உரிமையாளர்கள் மூலோபாய முடிவுகளை எடுப்பவர்களாக இருக்க, நாளாந்த தீர்மானங்களை எடுப்பதற்கு பொருத்தமான திறனாளர்களை வைத்திருப்பார்கள். இது அவர்களது பணிச்சுமையை பெரிதுமே குறைக்க உதவுகிறது.

### வினைத்திறன்வாய்ந்த தொடர்பாடல் (Communicates effectively)

முயற்சியாளர்களுக்கு இருக்கவேண்டிய மற்றுமொரு பிரதான தகுதிகளில் ஒன்று தொடர்பாடல் ஆகும். எவருடனும், இலகுவாக தொடர்பாடலை ஏற்படுத்திகொள்ளக் கூடிய, திறன் வாய்த்திருத்தல் இதன் அனுகூலமாகும்.

தனியே, தனது எண்ணங்கள் சிந்தனைகளை மாத்திரம் ஏனையவர்கள் மீது திணிக்கின்ற ஒருவழி தொடர்பாடலாக இல்லாமல், ஏனையவர்களின் அறிவுரைகளையும் ஏற்றுக்கொண்டு, கலந்துரையாடல்கள் மூலம் தம்மை வளர்த்துக்கொள்ளக் கூடியவினைத்திறன் வாய்ந்த இருவழி தொடர்பாடலாக அமைவதே சாலசிறந்தது ஆகும்.

ஒரு முயற்சியாளர், தன்னை ஒரு முயற்சியாளராக வெளியுலகுக்கு காட்டிக்கொள்ள, வெறுமனே தனது திறமைகளை மட்டும் வெளிப்படுத்தினால் போதுமானதாக இருக்காது. அத்துடன், அவர் சிறந்த தொடர்பாடல்வாதியாகவும் இருக்கவேண்டும். இல்லையெனில், எத்தகைய திறனுக்கும் சிறந்த அங்கிகாரம் கிடைக்கப்பெறாத நிலை ஏற்படும்.

உதாரணமாக, போட்டிகள் நிறைந்த சந்தையில் மிகச்சிறந்த தொடர்பாடலை மேற்கொள்ளாத போது, உண்மையான திறமையாளரைவிட, போட்டியாளர்களே வெளியுலகுக்கு அடையாளமாகத் தெரிவார்கள். இதற்கு மிக முக்கிய காரணமே, தொடர்பாடல் முறைமையை வினைத்திறன் வாய்ந்த முறையில் பயன்படுத்தாமைதான் ஆகும். அதிலும், இன்றைய காலக்கட்டத்தில் எந்தவொரு வணிகமும் தனக்குரிய விளம்பர தொடர்பாடலைக் கொண்டு வாடிக்கையாளரைக் கவரக்கூடியவகையில் வழங்காதபோதே தோற்றுபோகத் தொடங்கிவிடுகின்றன. எனவேதான், ஒட்டுமொத்த முயற்சியாளர்களின் எண்ணங்களுக்கும் இறுதி பெறுபேற்றைப் பெற்றுதருவதாக, இந்தத் தொடர்பாடல் முறைமை உள்ளது.

மேற்கூறிய அனைத்து திறன்கள் மாத்திரமே, ஒரு முயற்சியாளரை வெற்றியாளர்களாக அடையாளப்படுத்துவதில்லை. மாறாக, இவை அனைத்துமே ஒவ்வொரு முயற்சியாளரும் வெற்றிக்கான பாதையில் பயணிக்கும்போது, தன்னகத்தே வளர்த்துகொள்ளவேண்டிய அல்லது கொண்டிருக்கவேண்டிய திறன்கள் ஆகும். நிஜ உலகில் ஒருவரைப்போல இன்னுமொருவர் இருப்பதில்லை. ஒவ்வொருவருக்குமே, வெவ்வேறான திறமைகளும், திறனும் காணப்படும். ஆனால், வெற்றிபெற்ற எல்லா முயற்சியாளர்களையும் ஏறெடுத்துபார்க்கின், அனைவருக்கும் பொதுவான, அனைவர் இடத்திலுமே உள்ள திறன்களாக மேற்கூறியவை அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.


## தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

### கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி :+94(77)2034807 +94 (77) 776 9751

## தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்பாட்டுத் திட்டம்

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் இல்லாதொழிப்பதற்கான 'தேசிய ஊழல் எதிர்ப்பு செயற்பாட்டுத் திட்டம் 2025–2029" இன் உருவாக்கத்துக்கான கருத்துகள் மற்றும் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பரீட்சார்த்த முயற்சி மாகாண மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது வரைக் காலமும் நடைமுறையில் இருந்த இலங்கையிலிருந்து இலஞ்சம் மற்றும் ஊழலைத் இல்லாதொழிப்பதற்கான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் காலாவதியாகவிருந்த நிலையில், அந்த திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு புதிய தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரிக்கும் பணிகள் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் 'ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2025–2029" இனை தயாரிக்கவும், அதற்காக பொதுமக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்றும் ஆணைக்குழு தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கு, அரச துறை, தனியார் துறை, சிவில் அமைப்புகள், வெகுஜன ஊடகங்கள், சிவில் சமூக அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள், இளைஞர்கள், சிறுவர்கள், சமய தலைவர்கள் உள்ளிட்ட ஒட்டு மொத்த இலங்கை பிரஜைகளின் சார்பிலும் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கான 'ஊழலுக்கு எதிரான தேசிய செயற்பாட்டுத்திட்டம் 2025–2029 தயாரிப்பதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு, மாகாண மற்றும் தேசிய ரீதியில் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்கான தொடர் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதன் பரீட்சார்த்த வேலைத்திட்டம் வடமேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு ஆகஸ்ட் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. மேலும், மத்திய மாகாணம்மற்றும்வடமாகாணங்களில்கருத்துக்கள் பரிந்துரைகளைப்பெற்றுக்கொள்ளும்செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் ஏனைய மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மண்வளம்



இயற்கை நமக்களித்த இணையற்ற வளங்களில் ஒன்றான மண் வளத்தை பொறுத்தே மனித சமுதாயத்தின் வாழ்வும், மறைவும் அமைந்துள்ளது. அனைத்து உயிரினங்களும் மண்ணை சார்ந்தே வாழ்கின்றன.

மண்ணின்றி வாழ்வில்லை; வாழ்வின்றி மண்ணில்லை. மண் வளம் காத்திட தேசிய அளவிலான 'மண் வள அட்டை வழங்கல்' திட்டத்தை பிரதமர் மோடி துவக்கி வைத்தபோது, ''நலமான மண்ணே பசுமையான பண்ணைக்கு வழிவகுக்கும்," என்றார். வேளாண்மையில் தாவர வளர்ச்சிக்கு மண் ஒரு மிக முக்கியமான ஊடகமாகவும், உயிரினங்களின் நலத்திற்கு வளமான மண்ணே அடிப்படை ஆதாரமாகவும் அமைகிறது.

உலகளவில் மண் வளம், மண் நலம் மற்றும் அதன் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் 'சர்வதேச மண் அறிவியல் கூட்டமைப்பு 2012ம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் டிச.,5 ம் தேதி 'மண் வள நாள்' கொண்டாடப்படும் என அறிவிப்பு செய்து வளமான மண்ணின் முக்கியத்துவத்தை அனைவரும் உணர்ந்து, நீடித்த நிலையான மண்வள மேம்பாட்டு முறைகளை பின்பற்றிட வேண்டும், என வலியுறுத்தியது.

### உணவு, தீவனம்

மக்கள் தொகை பெருக்கத்துக்கு ஏற்ப தேவையான உணவு உற்பத்திக்காக அதிக விளைச்சல் தரும் தீவிர பயிர் சாகுபடி முறைகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டிய தவிர்க்க இயலாத சூழ்நிலையில் இந்தியா உள்ளது.

மண்வளம் என்பது பயிர் வளர்ச்சிக்கு தேவையான இன்றியமையாத 17 ஊட்டச்சத்துக்கள் போதுமான அளவில் பயிர்கள் எடுத்து கொள்ளும் வகையில் இருப்பதாகும். தீவிர விவசாயத்தில் அதிக விளைச்சலை பெற மண்ணில் இருந்து அதிக ஊட்டச்சத்துக்களை எடுத்து கொள்கிறது.

மண்ணில் இருந்து எடுக்கப்படும் ஊட்டச்சத்துக்களை திரும்பவும் மண்ணிற்கு அளித்தால் தான், அந்த மண்வளம் குன்றாத மண்ணாகவும், பயிர் மகசூல் குறையாததாகவும் இருக்கும். மண் பரிசோதனை செய்யாமல் பொது பரிந்துரைப்படி உரமிடுவதால் பயிர்களின் தேவைக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ உரமிடும் சூழ்நிலை ஏற்படலாம். இதனால் விவசாயிகளுக்கு இடுபொருள் செலவு அதிகமாகவோ அல்லது மகசூல் குறைவாகவோ ஏற்படலாம்.






**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 214,500.00 ரூபா.**

**24 கரட் தங்கம் 234,000.00 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** மாடுகளுக்கு தீவனமாக அரிசியை கொடுக்கலாமா?

**பதில் -**மனிதனின் இரைப்பை யில் உள்ள உணவுகள் நொதிப்பொருட் களாலும், அமிலங்களாலும் செரிமா னப்படுத்தப்படுகிறது.

எனவேதான் மனிதனின் இரப்பையில் அரிசியும், அரிசிப் பதார்த்தங்களும் எளிதில் ஜீரணமாகின்றன.

மனிதனின் இரைப்பை அமிலத் தன்மை சார்ந்து இருக்கின்றது.

ஆனால் அசைபோடும் பிராணிகளின் இரப்பை அவ்வாறு இருப்பதில்லை

மாறாக அசைபோடும் பிராணிகளின் இரைப்பையில் வாழும் கோடிக்கணக்காண நுண் உயிரினங்கள் தான் இரைப்பைக்குள் செல்லும் நார்ச்சத்து நிறைந்த உணவைச்சிதைத்து செரிக்கச் செய்கின்றன.

இந்த நுண்ணுயிர்கள் பசுவின் இரைப்பையில் செரிமான பணியை சரியாக செய்ய இரைப்பையில் இதமான சூழ்நிலை நிலவ வேண்டும்.

பசுக்களின் இரைப்பையின் நீர் எப்பொழுதும் கார அமிலத்தன்மையில் (பி.எச் 6 - 7) சமநிலையில் இருக்கும்.

இதனால் இரைப்பையில் நுண் உயிரினங்கள் செழிப்பாக வாழும்பொழுது பசுவின் செரிமானம் சீராக இருக்கும்.

சோளம் பசுவுக்கு மாவுச்சத்தை (கார்போஹைட்ரேட்) கொடுக்கக்கூடிய முக்கிய உணவுகளில் ஒன்றாக இருப்பதனால் சோளத்தை உமியோடு அரைத்து பசுவுக்கு கொடுக்கிறோம்.

சோளம்,மக்காச்சோளம்,கம்பு போன்ற அனைத்தையும் உமியோடு அரைத்து கொடுப்பதனால் ஜீரணத்தன்மை மெதுவாகவும், சீராகவும் நடைபெறுகிறது. இரைப்பையின் கார அமிலத்தன்மை நிலை நிறுத்தப்படுகிறது.

ஆனால் அரிசியில் 79 சதவீதம் மாவுச்சத்து உள்ளது என்பதனை நன்கு அறிவீர்கள்

இவ்வாறு இருக்க. உமியையும், தவிட்டையும் அகற்றி பெறப்பட்ட அரிசியை பசுவிற்கு கொடுக்கும்போது. இரைப்பையில் விரைவாக நொதித்து கேடு விளைவிக்கிறது.



**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி** +94(77)2034807
+94 (77) 776 9751




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 420/= |
| உருளைக்கிழங்கு | 360/= |
| பச்சை மிளகாய் | 1290/= |
| தக்காளி | 360/= |
| மரவள்ளிக்கிழங்கு | 250/= |
| கோவா | 160/= |
| கரட் | 420/= |
| வாழைக்காய் | 200/= |
| சின்ன வெங்காயம் | 485/= |
| பாகற்காய் | 500/= |
| வெண்டிக்காய் | 240/= |
| பயற்றங்காய் | 300/= |
| பீற்றூட் | 620/= |
| முருங்கைக்காய் | 950/= |
| தேங்காய் | 200/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 184/= |
| கனடா டொலர் - | 204/= |
| சீன யுவான் - | 37/= |
| யுரோ - | 294/= |
| ஜப்பான் யென் - | 1.8/= |
| சிங்கப்பூர்டொலர் - | 216/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 357/= |
| சுவிஸ் பிராங் - | 322/= |
| அமெரிக்க டொலர் - | 294/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 193/= |
| கனடா டொலர் - | 212/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 312/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர் டொலர் | 226/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 370= |
| சுவிஸ் பிராங் - | 337/= |
| அமெரிக்க டொலர் - | 303/= |

> **“விலை கேட்டுச்சாமான் வாங்கிறது நாகரீகக் குறைவே. இல்லாட்டில் கடைக்காறன் சாமான் நிறுக்கேக்கை எட்டிப்பாக்கிறது நாகரீகக் குறைவே .இல்லாட்டில் மிச்சக்காசை எண்ணி வாங்கிறது நாகரீகக் குறைவே. இல்லாட்டில் கையில தூக்கக்கூடிய சாமானைக் காவிக் கொண்டு நடக்கக்கூடிய தூரத்தை நடந்து போறது நாகரீகக் குறைவே”**

# எங்கட ஆச்சி



**காரைக்கவி கந்தையா பத்மானந்தன்**

இண்டைக்குவீட்டம்மாபிரதோசம்எல்லே மத்தியானம் கறி வைக்கிறதுக்கு கடைக்குப் போய் மரக்கறி ஏதும் வாங்கிக்கொண்டு வருவம் எண்டில்லை உந்தக் கண்டறியாத போனை விடியக்காலமையே தடவிக்கொண்டு இருக்கிறியள் எண்டபடியே தேத்தண்ணிப் பேணியைடொக்கெண்டு பக்கத்தில கிடந்த ரீப்போல வைச்சா. வீட்டம்மா தேத்தண்ணிப் பேணியை டொக்கெண்டு வைச்சா எண்டா கெதியாக் குடிச்சுப்போட்டு மினக்கெடாம மாறெண்டு அர்த்தம்

உந்த சைன் லாங்குவிஜ் விளக்கம் கன வீட்டு ஆம்பிளையளுக்குப் பத்தாது. அதாலதான் அவை தேவையில்லாமல் வாங்கிக்கட்டிறவை.

நானும் சுட்டாலும் பரவாயில்லை எண்டு மடக்மடக்கெண்டு குடிச்சன். இல்லாட்டில் அதுக்கும் பிறகு என்ன மளமளவெண்டு குடிக்காம மசமசவெண்டு ஏமிளாந்திக்கொண்டு நிக்கிறியள் எண்டு பேச்சு விழும.

பையை எடுத்துக் கொண்டு வெள்ளவத்தைப் பக்கமாப்போனன். அங்கதான்நல்லமரக்கறிஇருக்கும்எண்டது மற்றப்பெண்டுகள் மாதிரி வீட்டம்மான்ரை அபிப்பிராயம். வெள்ளவத்தையில மரக்கறி விக்கிறவங்களுக்கும் உந்த சூக்குமம்விளங்கும்.கலியாணவீடுகளுக்கு பொம்பிளைக்குமேக்கப்போடேக்கைவீட்டில நிக்கிற வயதுபோன அன்ரிமாருக்கும் அதை இதைப்பூசி விடுற மாதிரி அவங்கள் பழைய வாடின மரக்கறி எல்லாம் வடிவா ஈரச்சீலை போட்டுத்துடைச்சு வைப்பாங்கள். தூர நிண்டு பாத்தா அப்பதான் பியூட்டி பார்லரில போய் பிளீச்சிங் செய்து போட்டு வந்த அன்ரிமார்மாதிரி கொஞ்சம் உந்தக் காய்கறியள் நல்ல மினு மினுவெண்டு இருக்கும்.

நான் கடை கடையா ஏறி இறங்கி விலையளைப் பார்த்துக்கொண்டு வந்தன். என்னை ஆக்கள் கொஞ்சம் இளக்காரமாப் பாத்தவை. ஆக்கள் மட்டுமே கடைக்காறனுக்கும் என்னைக்கண்டா விலை விசாரிக்கின்றன் எண்டு சரியான இளக்காரம் .இப்பிடி ஒரு கடையில நான் வாய்பாத்துக் கொண்டு நிக்க , போற போற இடத்தில வாய்பாத்துக் கொண்டு நிக்காம சட்டுப்பட்டெண்டுசாமான்வாங்கத்தெரியாது எண்டு எங்கட வீட்டம்மா நெடுக எனக்குச் சொல்லுற வசனம்தான் இது.

ஒரு அன்ரி ஓட்டோல வந்திறங்கினா அவ அந்தக் கடையில இருந்து ஒரு இரு மீற்றரிலஉள்ளஒருஅப்பாற்மென்ரிலதான் இருக்கிறா.

மல்லி கத்தரி பஞ்சியாய் வெண்டி பஞ்சியாய் வெங்காயம் பஞ்சியாய் எண்டுபோட்டு போனில ஆரோடையோ நேரில கதைக்கிறமாதிரியே சத்தமாப் பஞ்சியில்லாமல் கதைச்சுக்கொண்டு நிக்க அவன் பஞ்சியப்படாம நிறுத்தது பாதி நிறுக்காதது பாதியா ஒரு பாக்கில போட்டு குடுக்க அவனிட்டை ஒரு ஆயிரம் ரூபாயைக் குடுத்தா .அவன் குடுத்த மிச்சக்காசைபஞ்சியிலஎண்ணிப்பாக்காமலே கான்ட்பாக்கில போட்டுப் போட்டு ஓட்டோல ஏறினா.அவவின்ரை பிள்ளையள் வெளிநாடுவழியை இருப்பினம் எண்டு நினைக்கிறன்.

கடைக்காறன்என்னைரெண்டாந்தரமும் அன்னதானமடத்தில சாப்பிடப் போன ஆளை மடக்காறர் இளக்காரமாப் பாத்தமாதிரி ஒரு பார்வை பாத்தான். எனக்கெண்டா அதைப்பாத்து வெக்கம் வரவேயில்லை. எங்கட வீட்டம்மாவும் நெடுகவும் வெக்கங்கெட்ட மனுசன் போற போற இடமெல்லாம் விடுப்பு விண்ணாயம் பார்த்துக்கொண்டு திரியும் எண்டு சொல்லுறதைக் கேட்டுப் பழகிப்போச்சு.

உண்ணாண எனக்கெண்டா ஒண்டும் விளங்கேல்லை

விலை கேட்டுச்சாமான் வாங்கிறது நாகரீகக்குறைவே. இல்லாட்டில்கடைக்காறன் சாமான் நிறுக்கேக்கை எட்டிப்பாக்கிறது நாகரீகக்குறைவே. இல்லாட்டில்மிச்சக்காசை எண்ணி வாங்கிறது நாகரீகக் குறைவே. இல்லாட்டில் கையில தூக்கக்கூடிய சாமானைக்காவிக்கொண்டுநடக்கக்கூடிய தூரத்தை நடந்து போறது நாகரீகக் குறைவே.உதை விடுங்கோவன்

இன்னும் சிலரில ஒரு பழக்கம் இருக்கு நடைபாதையில விலை குறைவாக நல்ல தரமான சாமான் இருந்தாலும் வெக்கம் எண்டு நாகரீகக் குறைவு எண்டு வாங்காமப் போய் அதே சாமானை சுப்பர் மார்க்கற்றில விலை கூடக்குடுத்து வாங்குவினம். கேட்டா பேவ்மென்றில கிறடிற்காட் பாவிக்கேலாதெல்லே எண்டு பகிடி விடுவினம். உதில பகிடி என்னண்டால் விலையும்கூடக்குடுப்பினம்பிறகு காட்டுக்கு வட்டியும் கட்டுவினம்.

நான் விலை கேக்கிறதுக்கோ இல்லாட்டில் பேவ்மென்றில நல்ல சாமான் இருந்தால் வாங்கிறதுக்கோ ஒருநாளும் பின்வாங்கிறதில்லை. காக்கிள்சுக்குப் போனாலும் விலை கேப்பன். உதால என்ர வீட்டம்மா சாமான் வாங்க என்னோட வாறதுக்கு சங்கடப்படுவா.சிலர் உதால விலை கேட்டுத் திரியிறதால என்னை கசவாரம் கஞ்சன் ஈச்சப்பி உவங்கட ஊர்க்காரர் எல்லாம் உப்பிடித்தான் எண்டுவினம். கஸ்ரப்பட்டு உழைக்கிற காசைக்கண்டவனுக்கும் விட்டெறிஞ்சா அதுக்காக என்னைக் கசவாரம் எண்டு சொன்னா நாகரீகம் தெரியாதவன் எண்டு சொன்னா நான் கவலைப்பட மாட்டன். ஏனெண்டால்உழைப்பின்ரைவலிஅப்பிடி.

# சுயதொழில் என்பது.

ஆரா

சுயதொழில் என்பது வருமானம் ஈட்டுவதற்காக ஒரு வழியாக பார்க்கப்படுகின்றது, ஒரு நிறுவனத்தில் பணிபுரிந்து நிலையான வருமானம் அல்லது சம்பளம் இல்லாத பொழுது சுய தொழில் செய்ய தேர்ந்தெடுக்கலாம், சுய தொழிலில் நாம் போடும் முயற்சியை பொறுத்து தங்களுக்கு வருமானம் தினந்தோறும் கிடைக்கின்றது




### சுய தொழில்

சுயதொழில் என்பது வருமானம் ஈட்டுவதற்காக ஒரு வழியாக பார்க்கப்படுகின்றது, வேலை மற்றும் நேரத்தின் முழு உரிமைகளை பெற விரும்புபவர்கள் சுய தொழிலை தொடங்கி அதன் மூலம் தங்களது வாழ்வாதாரத்தை பார்த்து வருகின்றனர். சுய தொழில் செய்து வருபவர்கள் வெவ்வேறு வாடிக்கையாளர்களுக்கு தங்களது சேவைகளை செய்து வருகின்றனர், ஒரு வணிகத்தை சொந்தமாகவும் வைத்திருக்க முடியும். சுயதொழிலை மேற்கொண்டு வருபவர்கள் ஒரே சமயத்தில் வெவ்வேறு நிறுவனங்களுடன் வேலை செய்ய முடியும்.

### சுய தொழில் செய்பவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு

ஒரு நிறுவனத்தில் பணிபுரிந்து நிலையான வருமானம் அல்லது சம்பளம் இல்லாத பொழுது சுய தொழில் செய்ய தேர்ந்தெடுக்கலாம், இதன் மூலம் நீண்ட காலமாக ஒப்பந்தம் இல்லாமல் தங்களுடைய சேவைகளை மற்ற வணிகங்களுக்கு விற்க முடியும். வர்த்தகம் உற்பத்தி அல்லது தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபடலாம். தனிநபர் சுய தொழில் செய்பவர்கள் என்றால் ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், கட்டிட கலைஞர்கள், மருத்துவர்கள், தணிக்கையாளர்கள், வடிவமைப்பாளர்கள், ஜோதிடர்கள் மற்றும் சிற்பிகள் என பலரை எடுத்துக்காட்டாக கூறலாம்.

### சுயதொழில் கிடைக்கும் வருமானம்

சுய தொழில் செய்யும் பொழுது தனி உரிமையாளராக அல்லது சுயதின ஒப்பந்ததாரராக வேலை செய்வதன் மூலம் தங்களுக்கு வரும் பணம், வணிகம் அல்லது கமிஷன் மூலம் சுயதொழில் வருமானம் பெறலாம். லாபத்திற்காக அல்லது நியாயமான லாபத்தை எதிர்பார்ப்பதன் மூலமாக சுயதொழிலில் வருமானம் பெற முடியும்.

### சுய தொழிலால் ஏற்படும் நன்மைகள்

சுய தொழிலால் ஏற்படும் நன்மைகள், சுய தொழில் செய்பவர்கள் தங்களுக்கு என தனக்குத்தானே ஒரு அட்டவணையை உருவாக்கி, அதன்படி வேலை செய்ய முடியும். மற்ற இடங்களுக்கு ஊழியர்களாக செல்லும் பொழுது தொடர்ந்து ஏழு மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்பது நிபந்தனை ஆனால் சுய தொழில் செய்தால் அந்த ஏழு மணி நேரத்தை காலை 3 மணி நேரமாகவும் இரவில் நான்கு மணி நேரம் எனவும் பிரித்து தங்களுடைய வேலையை அன்றைய தினம் முடித்துக் கொள்ள முடியும்.

### சுய தொழிலை தொடங்க தேவையான திறமை

ஒரு சுய தொழிலை தொடங்கும் பொழுது வாடிக்கையாளர்களை கையகப்படுத்துதல், நிதி வணிக நடவடிக்கைகள் சந்தைப்படுத்துதல் மற்றும் வரிகளை கவனித்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும், இவ்வாறான திறன்களை வளர்த்துக் கொண்டு சுய தொழிலை தொடங்கும் பொழுது அந்த தொழிலின் மூலம் அதிக வருமானமும் பெற முடியும்.

### வரம்பு இல்லாத வருமானம்

சுய தொழிலில் நாம் போடும் முயற்சியை பொறுத்து தங்களுக்கு வருமானம் தினந்தோறும் கிடைக்கின்றது, சுய தொழிலில் வருமானத்திற்கு வரம்பு கிடையாது, தாங்கள் செய்யும் வேலையை பொருத்து வருமானமும் அதிகரித்துக் கொண்டே செல்வதினால் பெரும்பாலான சுய தொழிலை தேர்ந்தெடுக்கின்றனர்.

### எந்தெந்த முறையில் சுய தொழில் செய்யலாம்

சுய தொழில் செய்யும் பொழுது வரி தள்ளுபடிகள் மற்றும் பலன்களை பெறலாம். சுய தொழிலில் உற்பத்தி வர்த்தகம் தனிப்பட்ட சேவை என பல வகைகள் உள்ளது. உற்பத்தி என்பது ஒரு பொருட்களின் உற்பத்தியை கொண்டுள்ளது, எடுத்துக்காட்டாக செங்கல் தயாரித்தல், மெழுகுவர்த்தி, சோப்பு, சாக்லேட் தயாரித்தல், பேக்கரி பொருட்களை உற்பத்தி செய்தல் தேங்காய் எண்ணெய் போன்ற தங்களால் முடிந்த அளவிற்கு உற்பத்தியை மேம்படுத்துவதாகும்.

### தனிநபரின் தனிப்பட்ட திறமை

தனிப்பட்ட சேவை என்பது திருமணத்தில் புகைப்படம் எடுத்தல், அலங்காரம் செய்தல், பழுது பார்க்கும் வேலைகள் மற்றும் பேஷன் டிசைனிங் கடை வைத்து சொந்தமாக நடத்துவது போன்றவைகள் தான் இதன் மூலம் தனிநபரின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்த முடியும்.

### சுய தொழில் என்றால் என்ன..?

தனிநபர் தனது தனித்திறமையை வெளிக்காட்டி அதிக வருமானம் பெறுவது சுய தொழில்

### சுய தொழில் செய்பவர்களுக்கு எடுத்துக்காட்டு?

வழக்கறிஞர்கள் மருத்துவர்கள் மற்றும் ஜோதிடர்கள்

### சுய தொழிலாளர் தனிநபருக்கு நன்மை கிடைக்கின்றதா?

ஆம், சுய தொழிலாளர் தனக்குத்தானே அட்டவணையை உருவாக்கி செயல்பட முடியும்

### சுய தொழிலால் கிடைக்கும் வருமானம் என்ன?

சுய தொழில் செய்பவர்களுக்கு வரம்பு இல்லாத வருமானம் கிடைக்கின்றது

**‘மேழி பிடிக்கும் கை வேல்வேந்தர் நோக்கும் கை, ஆழிசூழ்உலகத்தே அருளும்கை, காராளர் கையே’ எனப்பாடினார்.**

**விவசாயம் செய்வதற்கு மாடுகள் மிக அவசியம் அதுகுறித்தே ஒருவருக்கு மாடுமனை அமைவதே பீடு எனக்கொள்வர். நான் மாடுகளைப்பற்றி சொல்வதாயின் அது எமதுபசுவினங்களை தொடுமுன் காட்டுவாசிகளாக இருந்தஎருமைகளைப்பற்றி பேசியாக வேண்டும்.**

கூலி எதுவும் கொடுப்பதில்லை. நெல்லை அறுவடைசெய்வோம். நெல் எங்களுக்கு வைக்கோல் அதற்கு. நெல்லில் இருந்து அரிசியை குத்துவோம். அரிசிஎங்களுக்கு தவிடு மாட்டுக்கு. இப்படியே ஒவ்வொன்றிலும்மீதமாவதை அல்லது கழிவை மாடுகள் சாப்பிடும். மாடுகளில்பெண்கள் பசு என்றும,; ஆண்கள்காளைகள்அல்லதுஎருதுஎனவும் அழைக்கப்படும்.

# எங்கட வாழ்வியல்

## பார்வை



தமிழ்க்கவி



‘பாரக்கலப்பையடா செல்லனுக்கு பாரம் மெத்ததோணுதையா,

வயலோ பஞ்சு மெத்தை செல்லனுக்கு வரம்போ தலகாணி’

ஏத்திவிடு சின்னத்தம்பி! ஏன்றுஇடைக்கிடையே தமது பேச்சுகளையும் கலந்தபடி இந்தஏர்ப்பாட்டு வயலெங்கும் கெட்கும். இந்த பாட்டிற்குள்அவர்களது அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும்சொல்லாக கோர்க்கப்படும்.

ஏர்ப்பாட்டுக் கேட்டால் என்ன கேட்காவிட்டால் என்னஎருமைகள் தமது ஹிஆஜுக்கில்நடந்து கொண்டேயிருக்கும். கலப்பையை நேராக நிமிர்த்தி மேழியைப் பிடித்தபடி உழவன்நடந்து கொண்டிருப் பான்.அவனுடைய நடையில்தான் இந்தஉலகின்பசிபோக்கும்சக்தி இருக்கிறது. இதைத்தான் ஒருபுலவர்,

‘மேழி பிடிக்கும் கை வேல்வேந்தர் நோக்கும் கை, ஆழிசூழ்உலகத்தே அருளும்கை,காராளர்கையே’எனப்பாடினார்.

விவசாயம் செய்வதற்கு மாடுகள் மிக அவசியம் அதுகுறித்தே ஒருவருக்கு மாடுமனை அமைவதே பீடு எனக்கொள்வர். நான் மாடுகளைப்பற்றி சொல்வதாயின் அது எமதுபசுவினங்களை தொடுமுன் காட்டுவாசிகளாகஇருந்தஎருமைகளைப்பற்றி பேசியாக வேண்டும். எருமைகளைசாய்த்து கொண்டுவந்து அதற்கு வேலை பழக்கி விட்டாலும்அதற்குஉழவனின்கைத்தடியால் அடிப்பது வலிக்காது. ஏவ்வளவுதான் மழை பெய்தாலும் அதற்கு மகிழ்ச்சிதான். அதற்கு குளிராது.சேற்றிலேவிழுந்துபடுத்துவிட்டால் தான்நினைக்காதவரை எழாது. இவற்றில் பசுக்களிடமிருந்துபால்கறக்க மிகநுட்பமான முறைகளை கையாழுவார்கள்.

எருமைப்பால் மிகவும் சுவையானது. ஏருமைவளர்ப்பவர்கள்குறைந்துகொண்டே போவது ஆபத்தானது.

இரவில்மட்டுமேஅதற்குஉணவுகொள்ள நேரம். பகலில் ஏரிலோ, வண்டியிலோ, ஏற்றத்திலோ அதனைப்பிணைத்துவிட்டால் வேலைசெய்து கொண்டே இருக்கும் வேலைமுடிந்தபின்பே அதற்கு உணவு தண்ணீர் எல்லாம். அதற்காகஅதற்கு

காளைகளோஎருதுகளோஅவைபிறந்து இரண்டுவருடத்தில் அதற்கு குறிசுட்டாக வேண்டும்.அதாவதுஅதன்சொந்தக்காரர்தன் பெயரையோதன்பட்டிக்குரியசின்னத்தையோ மாட்டின் தொடையில் இரும்புக்கம்பியை நெருப்பில் காயவைத்து சூடு போட்டு அடையாளப்படுத்துவார்கள்.

இது அதிகமாக தைப்பூசம், விஜயதசமி போன்ற நாட்களில்செய்யப்படும். அதன் தோல் வெந்து பட்டை உரிந்துநிலை யானஅடையாளமாகஅது இருக்கும்.காளை கள்வளர்ந்து வரும்போதே அதை கைகயிற்றில் நடக்கபழக்குவார்கள். அது திமிறாமல் எஜமானுக்கு கட்டுப்பட்டுகைக்கயிற்றில் அதாவது அவருடைய கையில் பிடித்தகயிறை தன் கழுத்தில் தாங்கி குழப்படி இல்லாமல் நடக்கபழகும்.

வீட்டில் சிறுவர்கள் இருந்தால் அவர்களும்தத்தமக்கு முடிந்தஅளவில் மாடுகளை தட்டித்தடவி அதற்கு விரும்பியஉணவைக்



கொடுத்து அன்பாக பார்ப்பார்கள்.

கைக் கயிற்றை நிரவியபின், அதற்கு நுகம்வைத்துநடைபழக்கவேண்டும்.அதற்கு பஞ்சாங்கத்தில்நல்லநாள்பார்த்துமாட்டுக்கு நுகம் வைத்து பழக்க ஆரம்பிப்பார்கள். காளையானதும் படிப்படியாக, ஏற்கெனவே வேலைபழகிவேலைசெய்துகொண்டிருக்கும் மாட்டுடன் சேர்த்துஒவ்வொரு வேலையாக பழக்குவார்கள்..

மாடுகள் மனிதருடன் வைத்திருக்கும் விசுவாசம் அன்புஇவைகளை விட தமக்குள்ளும்அன்புடன்இருக்கும். இரண்டு காளைகளை சேர்த்து வேலை பழக்கி அது வேலைசெய்ய ஆரம்பிக்கும் போது இடது பக்கம் எது வலது பக்கம்எதுவென்று தீர்மானித்து அப்படியே பழக்குவார்கள். பெரும்பாலும் இவற்றை மறந்தும் பக்கம் மாற்றிப்பூட்டினால்குழப்பிவிடும். வேலை செய்யாது. மிகஅரிதாகஇருபக்கமும்வேலை செய்யும் மாடுகள் உண்டு. இடப்புறமாக பூட்டும்மாடுமற்றதைவிடநொந்துபோனதாக இருக்கும்காரணம்அதுஉள்வளைவுகளை கடப்பதால் உடல் வருத்தம் இருக்கும்.

வேலைகளும் பழகியாயிற்று என் றால் அது தன்இளமைக்கால பழக்க மாக அவிழ்த்து மேயும் போது பெண் பசுக்களை நாடிச்செல்லும். அதை மறியில் திரிவதாகசொல்வார்கள். அப்படி ஆண்மாடுகள் தமது சக்தியைகாதலில் வீணடித்தால் வேலை செய்யும் ஆற்றல்குறைந்துவிடும் என்பதால், அதன் ஆண்மையைஅழித்துவிடுவார்கள். இதற்கென கிராமங்களில் நிபுணர் கள்இருப்பார்கள்;

அவர்கள்அதைகச்சிதமாகசெய்வார்கள். அது மாடுகளுக்கு செய்யும் பெரிய கொடுமையானநிகழ்வானாலும் அந்த மாடுகளுக்கு அதன்போது முட்டை, சாராயம், என பருக்கி ஆசுவாசப்படுத்துவார்கள். பின்னரும்இரண்டு மூன்று வாரங்களுக்கு அதற்குபத்தியச்சாப்பாடும்ஊட்டச்சத்துகளும் வழங்கி அவற்றை தேற்றுவார்கள். அதற்கு மீண்டும் நடைப்பயிற்சி நாளாந்தக்குளிப்பு முழுக்குஎல்லாம் உண்டு. இனி அதற்கு நாம்பன் என்ற பெயர்கிடையாது அது எருது. தொடர்ந்து மாடுகள் உழைக்கும்.

மாடுகளுக்கு நோய் வந்து விட்டால் அதையும் கிராமவாசிகள்மிக இலகுவாக போக்குவார்கள். இதற்கான நோய்களைப்பற்றிய குறிப்புகளும, அவற்றுக்கானமருந்துகளும் பழைய ஓலைச்சுவடிகள் இருந்தன. அதிலிருந்து அவற்றை எழுத்தாக்கி காகிதத்தில் பதிப்பித்தும்வைத்திருந்தார்கள். அதற்கு 'பெரிய ம ாட்டுவாகடம்'என்றுபெயர். அதிக மான நோய்களுக்கு மருந்துகளின்றி அதற்கானஅடையாளச்சூடுகளைவிதித்திருந் தார்கள். அந்தவாகடத்தின் மருத்துவ குறிப்புகளில்பெரும்பாலானவைதாந்திரீக முறைகளாகவே இருந்தது நான்; அவர்களதுகுறிப்புகளைப்பற்றி வியந்தி ருக்கிறேன். உதாரணமாகதற்போதும் வரும் கால்வாய் நோய்க்கான மருத்துவம், வாகடத்தில் கூறியவகையில் நாம் செய்து மாடுகளைவிரைவில் குணப்படுத்தி வேலைகளை செய்திருக்கிறோம்.

காலப்போக்கில் எமது சோம்பல் களே ஏராளமான நமதுகையிருப் புகளை அந்நியருக்கு தாரைவார்க்க காரணமாகிவிட்டது. எரிபொருளை நிரப்பினால் உழவுசெய்யவும் அரிவு வெட்டவும் யந்திரம் வந்து விட்டது.



தமிழர் பொருளியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
26.01.2025

# இந்தியா-இலங்கை வரி, வணிக மற்றும் தொழில் ஒத்துழைப்பிற்கான புதிய பரிமாணங்கள்




இந்தியப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சருடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நடப்புத் திகதிகளில் நடக்கவுள்ள சந்திப்புகள் இருநாடுகளுக்கும் வரி, வணிக மற்றும் தொழில் துறைகளில் புதிய உயரங்களை எட்ட உதவவுள்ளது. இதற்கான ஆலோசனைகளும், தீர்வுகளும் வர்த்தக சமூகங்களுக்கு வெகுமுகமாக அமைய வேண்டும்.

## முக்கிய பேச்சுவார்த்தைகள்:

1. இருநாட்டுக்குமான வரி ஒத்துழைப்பு: இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தங்கள் (Double Tax Avoidance Agreement - DTAA) மீண்டும் சரிபார்க்கப்பட்டு, இருநாடுகளின் வர்த்தகர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் அனுகூலமான நடைமுறைகள் கொண்டு வர வேண்டும்.

## இரட்டை வரி தவிர்ப்பு ஒப்பந்தங்கள் (DTAA): ஒரு விரிவான பார்வை

இரட்டைவரிதவிர்ப்புஒப்பந்தங்கள் (Double Tax Avoidance Agreement - DTAA) என்பது இரு நாடுகளுக்கு இடையிலான வரி ஒப்பந்தமாகும். இது ஒரே வருமானத்தில் இரண்டுமுறை வரி செலுத்துவதைத் தவிர்க்கும் ஒரு வழிமுறையாக அமைகின்றது. இந்த ஒப்பந்தங்கள் முதலீட்டாளர்களுக்கும் வியாபார சமூகத்திற்கும் வரிச்சுமையை குறைத்து, இருநாடுகளுக்கிடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்த உதவுகின்றன.

## DTAA-வின் முக்கிய அம்சங்கள்:

1. இரட்டை வரிவிதிப்பை தவிர்க்குதல்: ம்வீபுபு ஒப்பந்தத்தின் மூலம், ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் ஒரே வருமானத்திற்காக இரண்டு நாடுகளிலும் வரி செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகாது.

எடுத்துக்காட்டாக:

லி இலங்கையில் உள்ள ஒரு நிறுவனத்துக்கு இந்தியாவில் முதலீடு மூலம் வருமானம் கிடைத்தால், அந்த வருமானத்திற்கு இந்தியாவில் மட்டும் வரி செலுத்த வேண்டும். இலங்கையில் மீண்டும் வரி விதிப்பு இருக்கக்கூடாது.

2. வரிச்சுமை குறைப்பு: DTAA ஒப்பந்தங்களின் மூலம், காப்பீடு, கையிருப்பு வட்டி, டிவிடென்டுகள் போன்றவை குறைந்த வரி விகிதத்தில் வரி விதிக்கப்படும். இது முதலீட்டாளர்களுக்கு நிதிச்சுமையை குறைக்கும். உதாரணமாக: இந்தியாவில் இலங்கையரின் பங்குகளில் இருந்து கிடைக்கும் பங்கு இலாபங்களுக்கு சலுகை அளிக்கப்படும்.

3. நன்மை தரும் வரிசூழல்: DTAA தங்களது வருமானத்தை வெளிநாடுகளில் ஈட்டும் நிறுவனங்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் சட்டப்பூர்வமான நன்மைகளை வழங்குகின்றது. இதனால் அதிக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஈர்க்கப்படுவார்கள்.

4. தகவல் பரிமாற்றம்: வரி மோசடிகளை தடுக்கவும், சுதந்திரமான வரி பரிசோதனை செயல்பாடுகளை மேம்படுத்தவும் DTAA இருநாடுகளுக்கிடையே வரியுடன் தொடர்புடைய தகவல்களை பரிமாற்றம் செய்ய வழிவகுக்கின்றது.

## இந்தியா-இலங்கை DTAA: மேலதிக பரிந்துரைகள்

இலங்கை-இந்தியா DTAA-வில் குறிப்பிட்ட சில மேம்பாடுகள் செய்யப்பட வேண்டும். குறிப்பாக, புதிய பொருளாதார சூழ்நிலைகள் மற்றும் வர்த்தக தேவைகளுக்கு ஏற்ப ஒப்பந்தத்தை புதுப்பிக்க தேவையுண்டு.

1. குறைந்த வரி விகிதங்கள்: கையிருப்பு வட்டி, பங்குதாரருக்கான டிவிடென்டுகள் போன்றவர்களுக்கு இந்தியா-இலங்கை இடையே குறைந்த வரி விகிதம் வழங்குதல். முதலீட்டாளர்களுக்கான வரிச்சலுகைகளை வரையறை செய்து வழங்குதல்.

2. சமரச விதிகள்: DTAA விதிகளின் கீழ் "Permanent Establishment (PE)" என்ற தகுதியின் அடிப்படையில் வரிவிதிப்பை மறுசீரமைக்க வேண்டும். குறிப்பாக, எல்லை தாண்டி உள்ள நிறுவனங்களின் இலாபங்களை சிறப்பாக கணக்கிடும் புதிய முறைகளை உருவாக்குதல்.

3. வாழும் நிலுவை பிரச்சினைகள்: DTAA நடைமுறையில் இருந்து அடிக்கடி காணப்படும் குழப்பங்கள் மற்றும் மாறுபாடுகளைத் தீர்க்க இருநாடுகளின் வரி அதிகாரிகளுக்கிடையே உறுதியான பேச்சுவார்த்தைகளை ஒழுங்கமைக்க வேண்டும்.

4. வரி நீக்கியதை உறுதிசெய்தல்: இருநாடுகளுக்கு இடையேயான சர்வதேச வர்த்தக அமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் குறிப்பிட்ட வரிகளைத் தளர்த்துதல் அல்லது நீக்குதல். கடலோர வர்த்தகம், இளஞ்சார்பு ஆற்றல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் வரிச்சலுகைகள் அளிக்குதல்.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

## DTAA-வின் பொருளாதார விளைவுகள்

1. முதலீடுகளை ஊக்குவித்தல்: DTAA மூலம் வரிச்சுமை குறையக் கூடியதால் இந்தியா மற்றும் இலங்கையின் வியாபாரிகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு இடையே அதிக முதலீடுகள் இடம்பெற வாய்ப்பு அதிகரிக்கின்றது.

2. வர்த்தக வளர்ச்சி: வரிப்பிரச்சினைகள் குறைவதால், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளில் இருக்கும் சிக்கல்களை நீக்கி, இருநாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும்.

3. நியாயமான வரிவிதிப்பு: இவ்வாறான ஒப்பந்தங்கள், குறைந்த வரிவிகிதங்களில் சரியான வரியினை வசூலித்து, அரசுகளின் வருவாய்ப்பற்றாக்குறையைத் தீர்க்க உதவுகின்றன.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களின் இந்திய விஜயத்தில் ம்வீபுபு தொடர்பான பேச்சுவார்த்தைகள் மிக முக்கியம். இந்தியாவுடன் வியாபார அனுகூல ஒப்பந்தங்களை உருவாக்குவது மட்டுமின்றி, புதிய ம்வீபுபு திருத்தங்களை கொண்டுவருவதன் மூலம் இருநாடுகளின் பரஸ்பர பொருளாதார நன்மைகளுக்கு வழிவகுக்கலாம்.

» கடற்றொழிலாளர்கள் மத்தியில் எழும்



வரி பிரச்சினைகளை தீர்க்கும் வகையில், வரி நிலுவைகள் குறித்த விலக்கு அல்லது தளர்வுகளை பரிந்துரைக்க வேண்டும்.

2. வர்த்தக தடைகளை அகற்றுதல்:

» இலங்கை வியாபாரங்களை இந்தியா முழுவதும் விரிவுபடுத்த விலக்கு மற்றும் சலுகை பிரவேச கட்டணங்கள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வரிகளில் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

**முக்கிய பொருட்கள் தொடர்பான வரித் தடை நீக்கப்பட்டு, இலகு போக்குவரத்தை ஊக்குவிக்க வேண்டும்.**

» இலங்கை மற்றும் இந்தியா இடையிலான வியாபார உறவுகளை வலுப்படுத்துவது பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய நடவடிக்கை. குறிப்பாக, வர்த்தக தடைகளை அகற்றுவது இருநாடுகளின் வியாபாரிகளுக்கும் முதலீட்டாளர்களுக்கும் பல நன்மைகளை வழங்கும். இதனை விரிவாக ஆய்வு செய்யலாம்:

1. விலக்கு மற்றும் சலுகை பிரவேச கட்டணங்கள்

· சலுகை வரி கட்டணங்கள்: இந்தியா முழுவதும் இலங்கை வியாபாரங்களுக்கு ஏற்றுமதி/இறக்குமதி சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். உதாரணமாக:

» இலங்கையின் தேயிலை, கறி, மற்றும் கடல் உணவுகளுக்கான இந்திய இறக்குமதி வரிகளை குறைத்தல்.

» இலங்கை தயாரித்த தொழிநுட்ப சாதனங்கள் மற்றும் ஆடைகள் இந்தியாவில் குறைந்த பிரவேச வரிகளுடன் அனுமதிக்கப்படுதல்.

· இலங்கை MSMEsக்கு ஆதரவு: சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான (MSMEs) வரிசலுகைகளை, இந்தியாவின் மாநிலங்களுக்கு தனிப்பட்டதாகக் கணக்கிட வேண்டும்.

» தமிழகத்தில் உள்ள வியாபாரிகளுடனான நேரடி கூட்டாண்மை வாய்ப்புகளை ஆதரிக்க விரிவான சலுகைகளை வழங்க வேண்டும்.

2. முக்கிய பொருட்களுக்கு வரித் தடைகளை நீக்குதல்

• தேவையான பொருட்களுக்கு வரி குறைப்பு: இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முக்கிய பொருட்களான மருந்துகள், உடைகள், மற்றும் இயற்கை ஆற்றல் உபகரணங்களுக்கு இந்திய வரிச் சுமையைக் குறைப்பது. இது இருநாடுகளின் நட்புறவுகளை மேம்படுத்தும்.

உதாரணமாக. இலங்கை மருந்து நிறுவனங்கள் இந்தியா முழுவதும் தங்கள் தயாரிப்புகளை குறைந்த செலவில் விநியோகிக்கலாம்.

» குறிப்பிட்ட பொருட்கள் மீது வரிப் பொதியுடன் தொடர்புள்ள தடைகள்: இருநாடுகளுக்கிடையே அதிக இடைவெளி இல்லாத பொருட்கள் (அதாவது, மிதமான தரவழங்கள்) தடை செய்யப்பட்டால், அந்த வரியினை அகற்றுவது நலனாக இருக்கும்.

3. இலகு போக்குவரத்தை ஊக்குவிக்குதல்

» மென்மையான போக்குவரத்து சட்டங்கள்: இந்தியாவின் முக்கிய துறைமுகங்கள் மற்றும் இலங்கையின் கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கிடையிலான சரக்கு போக்குவரத்துக்கான மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து ஒப்பந்தங்கள். மலிவு செலவில் கப்பல் போக்குவரத்துக்கு சலுகைகள்.

» விமான போக்குவரத்து: இந்தியா–இலங்கை இடையே விமான சரக்குப் போக்குவரத்துக்கு குறைந்த வரி கட்டணங்கள் மற்றும் விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

4. கடல் மற்றும் உள்ளக வணிகத்தில் சீர்மை

» கடல் வழியாக உள்ள ஏற்றுமதி சுங்கத் தடைகளை எளிமைப்படுத்தல்.

» இலங்கையின் தயாரிப்புகளை இந்தியாவின் உள்ளகப் பகுதிகளுக்கு விரைவாக விநியோகிக்க விமான போக்குவரத்து மற்றும் ரயில்வே இணைப்புகள் மேற்கொள்ளலாம்.

## நீட்டிப்பு திட்டங்கள்

1. உள்ளூர் தயாரிப்புகளை ஊக்குவித்தல்: இலங்கை நிறுவனங்களுக்கு இந்தியாவில் நிறுவன கூட்டாண்மைகளின் வாயிலாக அதிக வணிக சந்தைகள் பெற உதவி. ஏற்றுமதிக்கான உரிமங்கள் விரைவில் வழங்கப்பட வேண்டும்.

2. வர்த்தகத் தடைகள் குறைவால் பயன்படும் துறைகள்:

சமுதாயம்: MSMEs நிறுவனங்கள் அதிக இடுகையுடன் வர்த்தக சந்தையைப் பெறலாம்.

» தொழில் துறை: புதிதாக உருவாகும் தொழில்நுட்ப மற்றும் அச்சு துறைகள் இலகுவாக பரவ வாய்ப்புகள்.



இந்திய–இலங்கை வர்த்தக தடைகளை அகற்றுதல் இருநாடுகளுக்கும் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்தும், மேலும் இருதரப்பு வியாபாரத்தை வலுப்படுத்தும்.

3. சமூக பொருளாதார வளர்ச்சி:

» இந்திய வங்கிகளுடன் இணைந்து, இலங்கை சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSMEs) தனிப்பட்ட நிதி உதவிகளைப் பெறும் வழிமுறைகளை பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

» ஆற்றல் மற்றும் தொலைத்தொடர்பு துறைகளில் தொழிநுட்ப பரிமாற்றங்களை உறுதி செய்ய வேண்டும்.

4. கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகள்:

» தமிழகம் மற்றும் வடக்குப் பகுதியில் கடலோர வர்த்தக நடவடிக்கைகள் இடையூறின்றி முன்னேறிட வழிகாட்டி திட்டங்களை உருவாக்க வேண்டும்.

சிறிய மற்றும் நடுத்தர கடலோர தொழில்களுக்கு (SME Fisheries) இருநாடுகளின் சலுகைகளை வழங்குவதற்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம்.

இவ்வாறான சந்திப்புகள், இருநாடுகளுக் கிடையேயான வியாபார வளர்ச்சியை மட்டுமல்லாமல், சமூகத்தின் அடிப்படை பொருளாதார தலையங்கங்களையும் மேம்படுத்தும். வர்த்தக தீர்வுகள் மற்றும் வரி துறைகளின் பரஸ்பர ஒத்துழைப்பு இந்தியா–இலங்கை உறவுகளை வலுப்படுத்தும் வழிகாட்டியாக அமையும். இலங்கை குழுவின் இந்த முயற்சிகள் இந்திய வர்த்தகத்துடனான ஒத்துழைப்பை மேம்படுத்தவும், பொருளாதார நிலைப்பாட்டிற்கான நடைமுறைகளையும் உறுதிசெய்ய வேண்டும்.

# குடும்ப பொருளாதாரம்



குடும்பபொருளாதாரம்–வரவும்செலவும் சேமிப்பும். முன்பு எங்களின் குடும்ப வருமானம்மாதம்ஐயாயிரம்ரூபாய்மட்டுமே. குடும்பம் சற்று சிரமமான சூழ்நிலையில் தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. மூன்று ஆண்டுகளாக இதே சூழ்நிலை. பல ஆண்டுகளுக்குப் பிறகு சிறிய மாற்றம், குடும்ப வருமானம் சற்று அதிகரித்து மாதம் பத்தாயிரம் ரூபாய் ஆனது. சற்று ஆறுதலான விசயம் தான் ஆனாலும் வருமானம் போதவில்லை.

வீட்டுக்காரர் வெளிநாட்டு வேலைக்குச் சென்றபிறகு குடும்ப வருமானம் சற்று அதிகரித்தது. தற்போது மாதம் இருபதாயிரத்துக்கு மேல் வருமானம் வருகிறது. கணவர் வெளிநாட்டுக்குச் சென்று சம்பாதித்தால் வாழ்க்கை மாறும் வீட்டின் பொருளாதார நிலைமை மேம்படும் என்று எண்ணினோம் ஆனாலும் பெரிய மாற்றம் ஒன்றுமில்லை. வரும் வருமானம்மாதச்செலவுக்கும்கடன்களைத் திரும்பச் செலுத்தவும் சரியாக இருக்கிறது. பணத்தை மிச்சப்படுத்தவோ, சேமிக்கவோ முடிவதில்லை. இது பெரும்பான்மையான குடும்பங்களின் நிலைமை.

எதனால் இவ்வாறான சூழ்நிலை உருவாகிறது? இதற்குத் தீர்வு என்ன? இதை மாற்ற என்ன வழி?

சிறிய அளவில் வருமானம் வரும்போது, வருமானத்துக்கு ஏற்ப மிகவும் சிக்கனமாக செலவு செய்த குடும்பங்கள், வருமானம் அதிகரிக்கும் போது தனது செலவையும் அதிகப்படுத்திக்கொள்வதினால் உண்டாகும் சூழ்நிலை இது. சிறிய வருமானம், வாழ்க்கைச் செலவுக்கே வருமானம் போதவில்லை, சேமிப்பு என்று எதுவுமில்லை, என்று புலம்பும் குடும்பங்கள் வருமானம் அதிகரிக்கும் போது சிக்கனத்தையும் சேமிப்பையும் பற்றி சிந்திக்க வேண்டும். அதை விடுத்து, வருமானம் அதிகரிக்கும் போது அடக்கிவைத்த ஆசைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும், விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கி குவித்துவிட வேண்டும் என்று எண்ணுவதால் உண்டாகும் அவலம் இது.

மேலும் சிலர் இந்த வருமானம் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் என்ற அலட்சியத்தில் கடன்களை வாங்கி தங்களின் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். வருமானம் தடைபடும் வேளைகளில் கடன் தொல்லை காரணமாக இருப்பதையும் இழந்து வறுமையில் சிக்குகிறார்கள். இந்த உலகில் எதுவும் நிரந்தரமில்லை என்ற புரிதலுடன், இருப்பதைக் கொண்டு சிக்கனமாக வாழும் குடும்பங்கள் மட்டுமே மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்.

யாருக்கு எப்போது எந்த செலவு உண்டாகும்? எந்த தேவை உண்டாகும்? என்பதை யாராலும் கணிக்க முடியாது. அதனால் வருமானம் அதிகரித்த போதும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து சேமிப்பை அதிகரிக்க வேண்டுமே ஒழிய, செலவையும் ஆடம்பரத்தையும் அதிகரிக்க கூடாது. நிரந்தர வருமானமும் போதிய சேமிப்பும் உண்டாகும் வரையில் ஆசைக்காக எந்த செலவும் செய்யக்கூடாது. அத்தியாவசியச் செலவுகள் போக மீதமுள்ள அனைத்தையும் சேமித்து வைக்க வேண்டும்.

உங்கள் குடும்ப சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட தொகையை ரொக்கமாக வங்கியில் வைத்துக்கொள்ள வேண்டும். கூடுதலாக இருக்கும் பணத்தை, நிலம், கட்டடம், தங்கம், வியாபாரம், காப்பீடு, போன்றவற்றில் முதலீடு செய்ய வேண்டும். முதலீட்டிலிருந்து வரும் இலாபங்களை மட்டுமே ஆடம்பரச் செலவுகளுக்குப் பயன்படுத்த வேண்டும். முதலீடு அப்படியே இருக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும் முதலீட்டை செலவு செய்யக் கூடாது.

வங்கியில் அல்லது தபால் நிலையத்தில் சேமிப்புக் கணக்கு ஒன்றைத் தொடங்கி, சிறியதாகவோ பெரியதாகவோ, ஒரு தொகையை மாதாமாதம் சேமிக்க தொடங்குங்கள். ஒருநாள் அந்த சேமிப்பு வளர்ந்து நிற்கும் போது அதனை முதலீடாக பயன்படுத்துங்கள்.



தமிழர் பொருணமியம்
வாரமலர்
TAMILS ECONOMY

# பொருளாதார நெருக்கடியில் தவிக்கும் மாணவர்கள்

மஹேந்திரன் திருவரங்கன்

தற்போதைய பொருளாதார நெருக்கடி நாட்டின் கல்வித்துறையை பாரியளவில் பாதித்துள்ளது. முன்கல்வி மாணவர்கள் தொடக்கம் பல்கலைக்கழக இளங்கலை மாணவர்கள் வரை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களென அனைவரும் எதிர்பாராத பல சிக்கல்களை எதிர்கொண்டிருக்கின்றார்கள். எமது கல்வி நிலையங்களும் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு, காகிதாதிகள் மற்றும் இரசாயனங்கள் போன்ற கற்றலுக்கு தேவையான பொருட்களின் தட்டுப்பாடு போன்றவற்றால் கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்தும் நடத்த முடியாமல் திண்டாடுகின்றன.

விடுதிகளில் தங்கும் மாணவர்கள், வீடுகளில் தங்கிப்படிக்கும் மாணவர்கள் ஆகியோர் உணவு, போக்குவரத்து உட்பட அன்றாட தேவைகளை நிறைவேற்ற அரும்பாடுபடுகின்றனர். பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வருடம் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பில் நான்காம் வருட விஷேட கற்கைநெறியை தொடரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

குறைந்த வருமானத்தை கொண்ட குடும்பங்களை சேர்ந்த மாணவர்கள், ஒடுக்கப்பட்ட சாதிகளில் இருந்து வந்த மாணவர்கள், வறுமையால் பாதிக்கப்பட்ட நகர்ப்புற மாணவர்கள், மீன்பிடி சமூகங்களிலிருந்து வந்தோர், கிராமிய மற்றும் பெருந்தோட்டங்களில் வாழும் மாணவர்கள், போரால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கை சேர்ந்த மாணவர்கள் ஆகியோர் இந்நெருக்கடியில் அதிகமாக பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

கல்வியானது தொடர்ச்சியாக விலைமிகுந்ததாக மாறிவருவதனால் இலவசக்கல்வியானது சமூக நகர்வு மற்றும் சமூகநீதிக்கான கருவியாக இருக்கும் இயலுமை குறைந்துகொண்டே வருகின்றது. இதற்கான தீர்வுகளை நோக்கிச் செல்லவேண்டிய நிலையில், எமது இலவசக்கல்வியானது

இவ்வாறானநிலைக்குதள்ளப்பட்டமைக்கும், மாணவர்கள் கல்வித்துறையை விட்டும் தூரமாகுவதற்கெதிரான நடவடிக்கைகளை எடுக்க முடியாமைக்குமான காரணங்களை குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது.

## நெருக்கடியை புரிந்துகொள்ளுதல்

தற்போதைய பொருளாதார நெருக்கடியும் அது கல்வித்துறையில் ஏற்படுத்தும் பாதிப்பும், 1977களில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதார கொள்கைகளிலிருந்தும் அன்றிலிருந்து கல்வித்துறை திட்டமிடல்கள் உருவாக்கப்படும் நவதாராளவாத சிந்தனாமுறையிலிருந்தும் சிந்திக்கப்பட வேண்டிய விடயங்களாகும். தற்போதைய நெருக்கடியானது ஏற்கனவே முற்றுகையிடப்பட்டுள்ள ஒரு அமைப்பின் வெளிப்படையான விளைவே. இலங்கையில் ஏற்பட்ட கோவிட் பெருந்தொற்றானது இந்நெருக்கடியை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியதோடு சவால்மிகுந்ததாகவும் மாற்றியுள்ளது.

தற்போது மாணவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடியானது, தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் கல்வித்துறையில் காட்டிய அதீத அசமந்தப்போக்கின் விளைவேயாகும். பெருந்தொகையான பணம் ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தளை விமானநிலையம், தாமரை கோபுரம், கொழும்பை அழகுபடுத்தும் செயற்றிட்டங்களிலும் இராணுவ துணைப்பொருட்களை விரிவாக்கும் செயற்பாடுகளில் செலவளிக்கப்பட்ட நிலையில் 2012ஆம் ஆண்டிலிருந்து முன்வைக்கும் யில் 6%மான பகுதியை கல்விக்கு ஒதுக்கும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டே வந்துள்ளது. 1980களில் இருந்தே அரசாங்கங்கள் இளங்கலை மாணவர்களுக்கான விடுதி வசதிகளை ஏற்படுத்தல், கிராமப்புற பாடசாலைகளில் விஞ்ஞானத்துறை உட்பட உயர்தர வகுப்புகளில் பரந்தளாவிலான தேர்வுகளை ஏற்படுத்தும்படியான வளங்களை கொண்டு விருத்திசெய்தல் போன்ற கல்வித்துறைக்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகளை புறமொதுக்கியே வந்துள்ளன. இவ்வாறான வாய்ப்புவசதிகளை ஏற்படுத்தியிருந்தால் தற்போது மாணவர்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளுக்கான செலவுகளை நெருக்கடிச்சூழலில் கட்டுப்படுத்தியிருக்கலாம். ஏனெனில் குறைந்த வருமானம் பெறும், தொழிலாளர் வர்க்க குடும்பங்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை மையப்படுத்திய மீள்விநியோகமே நெருக்கடிக்கானபொருத்தமானதீர்வாயிருக்கும். இந்த அடிப்படையில் இம்மக்களுக்கு எவ்வகையில் உதவியாக இருக்கும் என்பதோடு சமத்துவமான சமூகமொன்றை உருவாக்கும் நடவடிக்கைக்கு துணைபுரியுமா என்பதை வைத்துத்தான் அரசாங்கம் தற்போது மேற்கொள்ளும் ஒதுக்கீடுகள் நியாயப்படுத்தப்படலாம். இந்த நியாயப்படுத்தல் அபிவிருத்திசார் நடவடிக்கைகளில் உலகளாவிய இலவசக்கல்வி மற்றும் இலவச மருத்துவத்தை மையப்படுத்தியதாக இருக்கவேண்டும். வருமான வரி மற்றும் சொத்துவரிகளை நடைமுறைப்படுத்துவதற்கான எமது அழைப்பு, இதனால் அறவிடப்படும் வருமானமானது இலவசக்கல்வி அமைப்பில் ஏற்றத்தாழ்வுகளை களைய பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

## நெருக்கடிக் காலத்தில் கல்வியை மீள்கற்பனை செய்தல்

நவதாராளவாதமானது எம்மை, கல்வியை ஒரு நேரங்குறிக்கப்படாத, வரலாறு இல்லாத, சமூகங்கள் எதிர்கொள்ளும் சமூக-பொருளாதாரசூழமைவிலிருந்தும் விடுபட்ட விடயமாகப் புரிந்துகொள்ள வைத்துள்ளது.

எமது கல்வித்திட்டங்களும் தேர்வு முறைகளும் கல்லில் செதுக்கப்பட்டவை போல வெறுமனே படிம அச்சுகளாக மாற்றப்பட்டுள்ளன.நவதாராளவாதமானது ஆசிரியர்களை வெறுமனே கற்றல் இயந்திரங்களாக மாற்றியிருப்பதோடு அவர்கள் கால சூழலுக்கேற்பவும் குறிப்பிட்ட வரலாற்று சூழலுக்கேற்பவும் கல்வித்திட்டங்களை புதிய கருத்தாக்கங்களோடும் கர்பனைகளோடும் கற்பிக்கின்றவர்களாக வார்க்கவில்லை.

இந்த நிலையில், குறுகிய காலத்திலான, அறிவார்ந்தரீதியில் அர்த்தமுடைய, குறைந்த செலவுடன் கூடிய கல்வித்திட்டமொன்றையும் தேர்வு முறைகளையும் மேம்படுத்தவேண்டிய தேவை உருவாகியுள்ளது. இவ்வாறான

முறைமைக்கு ஆசிரியர்கள் தயாராக இருந்தாலும், கல்வி நிர்வாகங்கள் அவற்றை கலந்துரையாடக்கூட தயாராக இருக்கவில்லை, இந்நிலையில் அவற்றை செயற்படுத்துவது எட்டாக்கனியே. பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் ஆகியன ஒரு பொதுவான கல்வித்திட்டத்தின் கீழ் காணப்படாவிடினும் அனைத்து பல்கலைக்கழகங்களும் வழக்கொழிந்து போன சட்டதிட்டங்களை கொண்டமையப்படுத்தப்பட்ட அமைப்புகளால் இயக்கப்படுவதோடு இவற்றில் எதிர்பாராத சமூக பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப தம்மை தகவமைக்கும் நிலை அரிதாகவே

காணப்படுகின்றது.

நெருக்கடிக் காலத்தில் கல்வியானது நெருக்கடியை மையப்படுத்தி காணப்பட வேண்டும். பல்கலைக்கழக பாடத்திட்டங்களும் தற்காலத்தைய அரசியல்– பொருளாதார சூழமைவுகளையும் அதனால் சமூகங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளையும் உள்ளடக்கக்கூடியவையாக தகவமைக்கப்பட வேண்டும். மாணவர்களும் ஆசிரியர்களும் தமது கல்வி நடவடிக்கைகளை நெருக்கடியையும் நெருக்கடியை உண்டுபண்ணும் கொள்கைகளையும் கருத்தியல்களையும் விளங்கிக்கொள்ளும் வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் மாணவர்களையும் ஆசிரியர்களையும் நெருக்கடிக்கான தீர்வுகளை காணும் வகையில் சமூகங்கள், தொழிற்சங்கங்கள், ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் கொள்கைவகுப்பாளர்களோடு சேர்ந்து இயங்கத் தூண்ட வேண்டும். கல்வியானது மாணவர்களின் அன்றாட வாழ்க்கையோடும் அவர்களின் சமூக அனுபவங்களோடும் இயைந்து கொண்டுபோகப்பட்டால் மாணவர்களுக்கு அது உற்சாகமான, விடுதலையுடன் கூடிய அனுபவமாக இருக்கும்.

பாடசாலை மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மட்டங்களில் பரீட்சைகள் மற்றும் தேர்வு முறைகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். நெருக்கடி சூழ்நிலைகள் வறுமைக்குட்பட்டோருக்குமேலும்சிக்கலானதாக மாறும் நிலையில் கல்விக்கான நியமங்கள் விரிவுபடுத்தப்பட்டு உள்ளீர்க்கப்படக்கூடியதாக வடிவமைக்கப்பட வேண்டும். குறைந்தது, பாடசாலை மட்டங்களிலாவது மாணவர்கள் அடுத்த படித்தரத்துக்கு உயரக்கூடிய வழிவகைகளை செய்ய வேண்டும். உதாரணமாக, பரீட்சைகளில் வழங்கப்படும் தேர்வு வினாக்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டு மாணவர்களுக்கான தேர்வுகள் விரிவாக்கப்பட வேண்டும். அண்மையில் நடத்தப்பட்ட சாதாரண தரப்பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் அனைவரையும் தேர்ச்சியடைய வைக்க வேண்டுமென்ற ருவந்தி டீசிகேரா அவர்களின் அழைப்பு கவனத்திலெடுக்கப்பட வேண்டிய அழைப்பாகும்.

எமது இளங்கலை மாணவர்களும் ஏற்கனவே கோவிட் பெருந்தொற்று காரணமாக பல்கலைக்கழகங்களில் கழிக்க வேண்டிய கால அளவை விட அதிகமாக கழிக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் அவர்களது கல்விக்காக குடும்பங்கள் செலவளிக்கும் இயலுமையும் குறைந்துள்ளது. சிலர் தமது குடும்பங்களை பராமரிப்பதற்காக உடனடியாக தொழில்களை தேட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்நிலையை தவிர்த்து மாணவர்கள் சரியான கால எல்லைக்குள் பட்டப்படிப்பை முடிக்கும் வகையில் தற்காலிகமாக மீள்வரையப்பட்ட பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டி இருக்கின்றது. கற்றல் மணித்தியாலங்களை குறைப்பது தொடர்பில் பல்கலைக்கழக பீடங்களில் சரியான கலந்துரையாடல்களின்றி முன்வைக்கப்படும் சீரற்ற முன்மொழிவுகள் குறித்து அவதானமாக இருக்க வேண்டியிருப்பதோடு, இந்நெகிழ்வுத்தன்மையை பரீட்சைகளில் செலவளிக்கப்படும் நேரங்களில் ஏற்படுத்தலாம். உதாரணமாக, சில பல்கலைக்கழகங்களில் ஒரு மாதத்துக்கும் மேலதிகமான காலத்தில் நடைபெறும் அரையாண்டு இறுதிப் பரீட்சைகளை வீட்டில் செய்யும் பரீட்சை முறை அல்லது இரண்டு முறைகளையும் இணைத்தவாறான வகையில் பரீட்சைகளை நடாத்துவதை குறித்து ஆலோசிக்கலாம். இதனால் மாணவர்கள் போக்குவரத்துக்காக செலவிடும் பணமும் குறைக்கப்படலாம்.

பொருளாதார சூழ்நிலையில் மாற்றம் ஏற்படும் வரையாவது மாணவர்களும் ஆசிரியர்களும் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு செல்லும் அமைப்பை கல்வி அமைச்சு ஏற்படுத்தலாம். இவ்வாறான சூழ்நிலைகளில் மாணவர்களை மரபார்ந்த பாடத்திட்டங்களில் கவனத்தை குவிக்கவைப்பதை விட அதனை மகிழ்ச்சிகரமான, தளர்வான கற்றலாக மாற்றலாம். பாடசாலைகளானது மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் இணைந்து நெகிழ்திறத்தோடு வாழ உதவும், அதற்கான இயங்கமைவுகளை வகுக்கும் சமூக சூழலாக மாற்றலாம். மாணவர்கள் பாடசாலை வெளிகளை தோட்டம் மற்றும் காய்கறிகளை நடும் செயற்பாட்டுக்கு உட்படுத்தலாம். சமூக ஈடுபாட்டோடு உருவாக்கப்படும் பாடசாலை சமையலறைகளின் மூலம் தேவையான ஊட்டச்சத்துகள் உட்கொள்ளும் மாணவ சமூகத்தை உருவாக்கலாம்.

## தொலைநோக்கொன்றை வடிவமைத்தல்

இலவசக்கல்வி அமைப்பும் இலவச மருத்துவமும் இலங்கை சமூகத்தை உடல், உள, அறிவார்ந்தரீதியில் ஆரோக்கியமாகவும் துடிப்பாகவும் வைத்திருந்தன. குறைபாடுகள் காணப்பட்டாலும் இலவசக்கல்வியானது சமூகத்தை ஜனநாயகப்படுத்தும் செயன்முறைக்கு முக்கிய பங்களிக்கின்றது. ஆதிக்க வர்க்கத்தின் தோற்றுப்போன பொருளாதார கொள்கைகளுக்கெதிரான எமது ஒன்றிணைந்த எதிர்ப்பானது, இலவசக்கல்வி மூலமான ஜனநாயகப்படுத்தலின் விளைவாகும். அரச பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் இணைந்து அமைப்பு மாற்றத்தை கோரி நிற்கின்றார்கள். இவ்வாறான சூழ்நிலைகளில் தான் இலவசக்கல்வியை உயிர்ப்புடனும் இயங்குதன்மையுடனும் வைத்திருக்கும் தேவை முன்னையதை விட அதிகமாக இருக்கின்றது.

எமது கல்வி அமைப்பை அன்றாட போராட்டங்களுக்கேற்ற வகையில் எவ்வாறு எதிர்த்தகைமையுடையதாக மாற்றலாம்? உயர் வளங்களை கொண்டுள்ள பாடசாலைகள் எவ்வாறு குறை வளங்களை உடைய பாடசாலைகளுக்கு உதவலாம்? எவ்வாறு வெளிநாடுகளில் வாழும் பொருளாதார ரீதியில் நிலையான தரத்தில் உள்ள பழைய மாணவர்கள் தமது பாடசாலைகளை சேர்ந்த வறுமைக்குட்பட்ட மாணவர்களை மாத்திரமன்றி ஏனைய மாணவர்களுக்கும் உதவலாம்? இந்நெருக்கடியை எதிர்கொள்ள எவ்வாறு பல்கலைக்கழகங்களும் பாடசாலைகளும் ஒன்றாக செயற்படலாம்? பாடசாலைகள் தாம் எதிர்கொள்ளும் சவால்களை முகங்கொடுக்கும் செயற்பாடுகளில் அந்தந்த சமூகங்கள் எவ்வாறு உதவலாம்? இக்கேள்விகள் உடனடியான தீர்வுகளை வேண்டி நிற்பவையாகும்.

நவதாராளவாமானது எம்மை கல்வியை சமூகநல்வாழ்க்கையின் விலையில் உருவாகும் தனிநபர் வெற்றிக்கு இட்டுச்செல்லும் வழியாகவே பார்க்கவைக்கின்றது. இது மீள்விநியோகத்தினூடாக சவால்மிகுந்த கட்டங்களை கடந்து வருவதற்கான கூட்டணிகளையும் தோழமைகளையும் அடையும் வழிகளை உற்சாகப்படுத்துவதில்லை. நாம் தற்போது கல்விப்புலத்திலும் அதற்கு வெளியிலும் எதிர்கொள்ளும் நெருக்கடி, எமது சமூக பொருளாதார வாழ்க்கை ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருப்பதோடு நாம் அனைவரும் நிலவுகைக்காக ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கின்றோம் என்பதை எமக்கு உணர்த்த வேண்டும். எமது பொருளாதார மற்றும் கல்விசார் தூரநோக்குக்காக நாம் இன்று உருவாக்கும் ஆதரவுமுறைகளும் மீள்விநியோக இயங்கமைவுகளும் தற்போது உருவாகியிருக்கும் நெருக்கடியை தாண்டியும் நீண்ட காலத்தில் எமக்கு உதவலாம். இந்நெருக்கடியை ஒரு வாய்ப்பாக பாவித்து நவதாராளவாதம் உருவாக்கியிருக்கும் பொருளாதார, சமூக மற்றும் உள கட்டுப்பாடுகளை தகர்த்து ஒரு சமத்துவ சமுதாயத்தை கற்பனை செய்வோமாக.

# பலரின் பொருளாதாரத்தை உலுக்கி போட்ட காட்டு தீ

**இந்தச்சூழ்நிலையில்அனைத்துலாஸ்ஏஞ்சல்ஸ்வாசிகளின் மனதில் இருக்கும் ஒரே கேள்வி ஒன்றுதான். அது, இந்தக் காட்டுத் தீ எங்கிருந்து தொடங்கியது? மில்லியன் டாலர் கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. என்றாலும், தீயால் பாதிக்கப்பட்டவர்கள், கடந்த வாரத்தில் மணிக்கு 80 முதல் 100 கி.மீ., வேகத்தில் வீசிய சாண்டா அனா காற்று தீயைப் பரப்பியது என தங்களுக்குள் காரணங்களைப்பேசித்தீர்க்கிறார்கள். இதனிடையே, சிலரின் விரல்கள், மலையேறுபவர்கள், மின் கோபுரங்களையும் சுட்டிக்காட்டுகின்றன.**



மேற்கு லாஸ் ஏஞ்சல்ஸின் டெமெஸ்கல் கன்யானின் மலையேறும் பாதை உள்ளூர்வாசிகளுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. பசிபிக் பாலிசேட்ஸை உருவாக்கும், உயரத்தில் வளைந்து நெளிந்து செல்லும் சாலைகள், அலங்கார வீடுகள் நகரத்தின் நெருக்கடியில் இருந்து தப்பிக்க விரும்பும் மலையேறுபவர்கள் அங்கு பசிபிக் பெருங்கடலின் நீரைத் தெளிவாக காணலாம்.

பள்ளத்தாக்கின் பச்சைப் போர்த்திய புதர்கள் இன்று சாம்பலாக மாறியுள்ளன. கண்ணுக்கெட்டிய தூரம் சாம்பல் மேடுகளாக உள்ளது. மலையேறும் பாதைகளை தடை செய்யப்பட்ட பகுதி என எச்சரிக்கும் பொலிஸாரின் மஞ்சள்நிற ரிப்பன்கள் தடுத்து நிற்கின்றன. அந்தப் பகுதிகளில் பல வீடுகளை அழித்த பெருங்காட்டுத் தீ அங்கிருந்து தோன்றியிருக்கலாம் என்று புலனாய்வாளர்கள் கருதுகின்றனர். நகரின் வடக்கே பல பகுதிகளிலும் இதுபோன்ற காட்சிகளையே காணமுடிகிறது. புலனாய்வாளர்கள் மலைகள் மற்றும் பாதைகளில் உள்ள பாறைகள், பாட்டில்கள், கேன்கள் போன்ற அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து வருகின்றனர். என்றாலும், இந்தக் காட்டுத் தீயின் துவக்கம் இன்னும் பிடிபடவில்லை.

இந்தச் சூழ்நிலையில் அனைத்து லாஸ் ஏஞ்சல்ஸ்வாசிகளின் மனதில் இருக்கும் ஒரே கேள்வி ஒன்றுதான். அது, இந்தக் காட்டுத் தீ எங்கிருந்து தொடங்கியது? மில்லியன் டாலர் கேள்விக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. என்றாலும், தீயால் பாதிக்கப்பட்டவர்கள், கடந்த வாரத்தில் மணிக்கு 80 முதல் 100 கி.மீ., வேகத்தில் வீசிய சாண்டா அனா காற்று தீயைப் பரப்பியது என தங்களுக்குள் காரணங்களைப் பேசித் தீர்க்கிறார்கள். இதனிடையே, சிலரின் விரல்கள், மலையேறுபவர்கள், மின் கோபுரங்களையும் சுட்டிக்காட்டுகின்றன.

காட்டுத் தீக்கான காரணங்களை குறித்து புலனாய்வு செய்து வருபவர்கள், இந்தக் கருதுகோள்களையும் கவனத்தில் கொள்கின்றனர். என்றாலும் அதனையும் தாண்டி காரணத்தைத் தேடுகின்றனர். தீ எரிந்த சென்ற வடிவங்கள், கண்காணிப்பு கேமரா காட்சிகள், முதலில் பார்த்தவர்களின் சாட்சிகள் என நம்பிக்கையுடன் பல்வேறு துப்புக்களை பின்தொடர்ந்து காரணங்களை கண்டுபிடித்துவிட முயல்கின்றனர்.

ஆனாலும், இந்த மர்மம் தீர்க்கப்பட அதிக நாட்கள் எடுக்கும், ஒரு வருடம் கூட ஆகலாம் என்று கூறப்படுகிறது. அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மது, போதைப்பொருள், தீயணைப்பு மற்றும் வெடிபொருள் பிரிவின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், 'எல்லோருக்கும் பதில் தேவையாக இருக்கிறது. எங்களுக்கும் பதில் தேவை. இந்தச் சமூகம் அந்த பதிலுக்கு அருகதையுடையதே. ஆனாலும் பதில் கிடைக்க இன்னும் நேரம் பிடிக்கும்' என்றார்.



மலையேறுபவர்களின் வீடியோக்கள்: இயற்கை ஆர்வலர்களும், கலிபோர்னியாவின் கல்வெட்டு ஆய்வாளர்களும் அடிக்கடி செல்லும், டெமெஸ்கல் கன்யானில் மலையேறிக் கொண்டிருந்த கை கிரான்மோரும் அவரது நண்பர்களும் பாலிசேட்ஸில் உண்டான தீயை முதலில் பார்த்திருக்கலாம்.

இணையத்தில் பகிரப்பட்ட அவர்களின் பல





வீடியோக்களில் ஜன.7-ம் திகதி காலையில் கிரான்மோர் மற்றும் அவரது நண்பர்கள் மலையில் இருந்து கீழே ஓடுகின்றனர். அவர்களின் முதல் வீடியோவில், அவர்கள் தப்பித்து ஓடும் முயற்சியில் இருக்கும் போது, அவர்களுக்கு பின்னே மலைகளில் இருந்து ஒரு நீண்ட புகை மேல் நோக்கி எழுகிறது. மூச்சுத் திணறல்களுக்கு இடையே அவர்கள் புகையை பார்ப்பதற்கு முன்பு ஏதோ எரிவதை உணர முடிந்ததாக கூறுகின்றனர். மற்றொரு வீடியோவில், அந்த புகை, கருமேகம் போல உருமாறி பின்பு தீப்பிழம்பாக மலைமேல் எரிகிறது.

பாலிசேஸ்ட் தீ குறித்த அதிகாரப்பூர்வ விசாரணையின் ஒரு பகுதியாக மலையேறுபவர்களின் வீடியோக்களும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன என்று ஏடிஎஃப்-ஐ சேர்ந்த கால்ப்ரூன் உறுதிப்படுத்தியுள்ளார். இதனிடையே, அமெரிக்க ஊடகங்களில் பேட்டி அளித்த மலையேறும் குழுக்களைச் சேர்ந்தவர்கள், மக்கள் சமூக வலைதளங்களில் தங்கள் மீது தொடுக்கும் தாக்குதல் காரணமாக மிகவும் பயத்தில் இருப்பாத தெரிவித்துள்ளனர்.

கால்ப்ரூன் கூறுகையில், ‘இந்த மலைபகுதியில் சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட தீயை தீயணைப்பு வீரர்கள் அணைத்தனர். என்றாலும், அது முழுமையாக அணைக்கப்படவில்லை’என்றார். ஜனவரி 1-ம் திகதி ஏற்பட்ட அந்தத் தீ முழுமையாக அணைக்கப்படாததால், ஆறு நாட்கள் கழித்து காற்று அந்த தீயை வேகமாக பரவச் செய்திருக்கலாம் என்ற ஒரு பேச்சும் அங்கு நிலவுகிறது.

பாலிசேட்ஸ் காட்டுத் தீ உள்ளூர் நேரப்படி காலை 10.30 மணிக்கு ஏற்பட்டதாக கருத்தப்படுகிறது. ஆனால், பல மலையேற்றக் குழுக்கள் காலையில் அந்தப் பாதை வழியாக போகும் போதே புகையின் வாசத்தை உணர்ந்ததாக ஊடகத்திடம் தெரிவித்தனர்.

பற்றி எரிந்த மின்கோபுரம்: இதனிடையே, தலைமை மாரோன் நகரின் மறுபுறம் உருவான ஈட்டன் காட்டுத் தீயை அணைப்பதில் தீவிரம் காட்டிக் கொண்டிருந்தார். ஈட்டன் காட்டுத் தீ ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவை எரித்து நாசமாக்கியுள்ளது. 17 பேர் உயிரிழந்துள்ளனர். பாலிசேட்ஸ் காட்டுத் தீ ஏற்பட்ட பல மணி நேரங்களுக்கு பின்னர் ஜனவரி 7-ம் திகதி சூரிய அஸ்தமனத்தின் போது ஈட்டன் காட்டுத் தீ ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தீயின் ஆரம்ப பொழுதுகளை ஜெஃப்ரி கு என்பவர் படம் பிடித்துள்ளார்.

அப்போது அந்த தீ மிகவும் சிறிய அளவிலேயே இருந்துள்ளது. அது ஒரு பெரிய இரும்பு கோபுரத்தின் கீழ் எரிந்து கொண்டிருந்தது. அந்தத் தீ எவ்வளவு வேகமாக பரவியது என்பதை கு-வின் தொடர்ச்சியான வீடியோக்கள் காட்டுகின்றன. தற்போது தீ குறித்து விசாரித்து வரும் புலனாய்வாளர்களின் கவனத்தை கு-வின் வீடியோவில் உள்ள இரும்பு கோபுரம் ஈர்த்துள்ளது.

கடந்த 2018-ம் ஆண்டு, 85 பேர் உயிரிழப்புக்கு காரணமான கேம்ப் தீ விபத்து உட்பட கலிபோர்னியாவில் ஏற்பட்ட பல மோசமான தீ விபத்துக்களுக்கு மின்சாரம் வழங்கும் நிறுவங்களும், மின் கோபுரங்களும் காரணமாகியிருக்கின்றன என்பது இங்கே நினைவுகூரத்தக்கது.



# கடன் அன்பை முறிக்கும்

**கடன் நல்லதா, கெட்டதா?**

**கடன்குறித்தஇந்தக்கேள்விக்குநேரடியாகபதில்சொல்லிவிட முடி யாது. அது தேவையை பொறுத்தது. அத்தியாவசிய தேவை, ஆடம்பர தேவை இதைப் பொறுத்துதான் கடன் வாங்குவது நல்லதா கெட்டதா என்பதை முடிவு செய்ய முடியும் என்பதுதான் நிதி ஆலோசகர்களின் கருத்து.**

மீரா ஜெயச்சந்திரன்

கடன் அன்பை முறிக்கும் என்பது வெறும் பழமொழி அல்ல; அது முன்னோர்களின் அனுபவப் பாடம். கடனில்லாத வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என்று முன்னோர்களும் வாழ்ந்துசென்றிருக்கலாம். ஆனால் இன்றைய காலத்தில் கடனில்லாத வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவே முடியாது. இன்று எவற்றிற்கு கடன் வாங்கலாம் என்கிற எந்த வரம்புகளும் இல்லாமல் வாங்கிக் குவிக்கிறோம். கட்ட முடியாத அளவுக்கு வாங்கிக் குவித்து, வருமானத்தை கடனுக்கும், வட்டிக்கும் கட்டி வருகிறது பல குடும்பங்கள்.

இதற்கு ஏற்ப கடன் வாங்குவதற்கான வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. கடன் கொடுப்பதற்குஎன்றேஸ"லோன்மேளா"-க்களை நடத்துகின்றனவங்கிகள். தொலைக்காட்சிகளில் சரிபாதி விளம்பரங்கள் வீட்டுக்கடன், வாகனக் கடன் என்பதாகவே இருக்கிறது. இதுதவிர தனிநபர் கடன், திருமணம், கல்வி, சுற்றுலா, மருத்துவச்செலவுஎனஅனைத்துவகைகளிலும் கடனை வாங்குவது அதிகரித்துள்ளது. கூடவே வீட்டு உபயோகப்பொருட்கள் கடன், கிரெடிட் கார்டு கடனும் சேர்ந்து கொள்கிறது. ஆக கடனில்லாத ஒரு வாழ்க்கையை வாழ முடியாது என்பதுதான் உண்மை. ஒரு சராசரி குடும்பம் ஏதாவது ஒரு வகையில் கடன் வாங்கியே ஆகவேண்டும்.

## நல்லதா, கெட்டதா?

கடன் குறித்த இந்தக் கேள்விக்கு நேரடியாக பதில் சொல்லிவிட முடி யாது. அது தேவையை பொறுத்தது. அத்தியாவசிய தேவை, ஆடம்பர தேவை இதைப்பொறுத்துதான்கடன்வாங்குவது நல்லதா கெட்டதா என்பதை முடிவு செய்ய முடியும் என்பதுதான் நிதி ஆலோசகர்களின் கருத்து.

மார்க்கெட்டிங் வேலையில் இருக்கும் ஒருவருக்கு பைக் அவசியமானதாக இருக்கும். அவரது தொழிலில் நீடிக்க முடியும். வருமானம் அதிகரிக்க முடியும் என்கிற நிலையில் வாகனக் கடன் அவசியமாகிறது. அதே நேரத்தில் வருமானத்தில் பல கடன்கள் இருந்து கொண்டிருக்கும் நிலையில் ஒரு நடுத்தர குடும்பம் வாகனக் கடன் வாங்க ஆசைப்படுவது வருமானத்துக்கு மீறியது. சுற்றுலா செல்ல வேண்டும் என்று தனிநபர் கடன் வாங்கினால் அது சுமையாக மாறிவிடும்.

கடன் குறித்த பயமும், பயன்பாடும் இப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார்கள் நிதி ஆலோசகர்கள். அதாவது நமது வருமானத்தை முன்கூட்டியே செலவு செய்து கொண்டிருக்கிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

## கடன் அளவு

கடன் வாங்குவதற்கான அடிப் படை தகுதி அதை எப்படி திருப்பி செலுத்துவோம் என்பதை பொறுத்து தான். மொத்தமாகவோ அல்லது தவணை முறையிலோ திருப்பிச் செலுத் தும் அளவுக்கு வருமானம் இருந்தால் கடன் கிடைக்கும். வருமானத்தில் 60 சதவீதம் அல்லது மாத வருமானத்தில் செலவுகள் போக மிச்சமிருக்கும் உபரி தொகை இந்த இரண்டின் அடிப்படையில் கடன் வாங்கும் அளவு தீர்மானிக்கப்படுகிறது.

## கடன் தகுதி

கடன்வாங்குபவரின்வயதுமற்றும்எத்தனை ஆண்டுகளில் அந்த கடனை கட்டி முடிப்பார் என்பதை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது. அதிகபட்சவயதுவரம்பு60என்றுகணக்கிடப்படும். இளம் வயதிலேயே கடன் வாங்கினால் கடனைத் திருப்பி செலுத்த அதிக காலம் கிடைக்கும். 30 வயதில் கடன் வாங்கினால் அடுத்த 30 ஆண்டு காலம் வரை கடனை கட்ட முடியும். 50 வயதான நபர் வாங்குகிறபோது அவருக்கும் 10 ஆண்டுகள்தான் இருக்கும்.

## சிபில்

வங்கிகளில் நாம் விண்ணபித்த உடன் கடன் கிடைக்காது. கடன் தகுதி அளவிடும் நிறுவனமான சிபில் நிறுவனத்தின் அறிக்கை அடிப் படையில்தான் கடன் கிடைக்கும். சிபில் அறிக்கையில் புள்ளிகள் குறைவாக இருப்பவர்களுக்கு கடன் கிடைக்காது. கடந்த காலத்தில் கடன் வாங்கி முறையாகச் செலுத்தாமல் இருந்திருந்தால் சிபில் புள்ளிகள் குறையும். எனவே பழைய கடனை திரும்ப கட்டிய பிறகே புதிதாக கடன் கிடைக்கும்.

## ஒரே கடன்

பல இடங்களிலும் கடன் வாங்குவது பாதுகாப்பனதல்ல. எதைக் கட்டுவது என்று குழம்பம் வரும். எல்லா கடன்களையும் மொத்தமாக ஒரே கடனாக மாற்றிகொண்டால் செலுத்துவதற்கு வசதியாக இருக்கும். கிரெடிட் கார்டில் வாங்கும் கடன்களை உரிய காலத்தில் கட்டவில்லை என்றால் வட்டி அதிகமாக கட்ட வேண்டும். மீட்டர் வட்டி கடன்கள், தினசரி வட்டி கடன்கள் பக்கம் போகவே வேண்டாம். தனிநபர் கடன்கள் வாங்குவதை தவிர்ப்பதும் நல்லது.

## அடமானக் கடன்

மூத்தக் குடிமக்களுக்கு என்று வங்கி அடமானக் கடன் கொடுக்கிறது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சொந்த வீட்டின் மதிப்பின் அடிப்படையில் வங்கியில் இந்த கடன் வாங்கலாம். அவர்களுக்குப் பிறகு அந்த வீடு விற்கப்பட்டு கடனுக்கு ஈடான தொகை எடுத்துக் கொள்ளப்படும்.

## கடனுக்கு முன்பு

கடன் வாங்கும்போது எழுதி கொடுக்கும் முத்திரைத்தாளில் கடனுக் கான வட்டி, திரும்பச் செலுத்தும் காலம், கடன் தொகை போன்றவை சரியாகக் இருக்கிறதா என்பதை பார்த்து கையெழுத்திட வேண்டும். வங்கியில் கடன் வாங்கும்போது கடன் வாங்க என்னென்ன ஆவணங்கள்கொடுக்கிறோம்என்கிறபட்டியலை உரிய அதிகாரியின் கையெழுத்து மற்றும் முத்திரையுடன் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## கடனுக்கு பின்பு

கடன்வாங்கியபிறகும்சிலநடைமுறைகளைக் கடைபிடிக்கவேண்டும்.வாகனக்கடன்வாங்கினால் வாகனத்தின் ஆர்சி புக் வங்கியில் இருக்கும். கடனை திருப்பிச் செலுத்திய பிறகு அதை நமது பெயருக்கு மாற்றி வாங்க வேண்டும். அசையா சொத்துகளின் பேரில் வாங்கிய கடனை திரும்ப செலுத்திய பிறகு மூல ஆவணங்களையும், கடன் பாக்கி இல்லை என்பதற்கான நோ டியூ சான்றிதழ் மற்றும் வங்கிக்கு அந்த சொத்து மீது எந்த உரிமையும் இல்லை என்பதற்கான சான்றிதழையும் (liability certificate) வாங்க வேண்டும். அடமானக் கடனை பதிவு செய்திருந்தால் அதை ரத்து செய்ய வேண்டும்.

கடன் நமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் செய்யும். அதேநேரத்தில் வரம்பு மீறிச் சென்றால் நமது வாழ்க்கைத் தரத்தை சீர்குலைக்கவும் செய்துவிடும். சரியாகப் பயன்படுத்த தெரிந்தால் கடன் வாங்குவதும் நல்ல வாய்ப்புதான் . ஆனால் வாங்குவதற்கு முன் ஒன்றுக்கு பத்து முறை யோசித்து செயல்படுவது சிறப்பு.

# காரைநகர் பட்டறை

காரை நிரோசன்
பல்லுயிர் நிறுவனம்

**இப் பட்டறை நிகழ்வில் இயற்கை விவசாயம், நன்னீர் மேலாண்மை, சித்த வைத்தியம், கோவில் பொருளாதாரம், பனை பொருளாதாரம்,சிறுகைத்தொழில் முயற்சியாலர்களின் பொருட்கள் மற்றும்நவீனதொழில்நுட்பங்கள் என்றவற்றை உள்ளடங்களாக ஓர் கண்காட்சி நடைபெற்றது.**

காரைநகர் பட்டறை மக்கள் மனங்களில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துதல் மற்றும் காரை நகர நோக்கி பல்வேறு உற்பத்திகளை ஏற்படுத்துதல் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல் இளைஞர்கள் புலம்பெயர்களை தடுத்தல் காரைநகரை நோக்கி மக்களை தொழில்ரீதியாகஉள்வாங்குதல்உற்பத்திகளை அதிகப்படுத்துதல் போன்றவற்றை நோக்காக கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது

பல்வேறு இளைஞர்கள் மற்றும் பல்வேறு இளம் குடும்பங்கள் காரைநகரை விட்டு வெகு தூரம் செல்வதனால் காரைநகர் சார்ந்த பொருளாதாரம் வலு குறைந்து கொண்டு இருப்பதனால் அதனை பாதுகாக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் பட்டறை நிகழ்வாகும்.

இப் பட்டறை நிகழ்வில் இயற்கை விவசாயம், நன்னீர் மேலாண்மை, சித்த வைத்தியம், கோவில் பொருளாதாரம், பனை பொருளாதாரம், சிறு கைத்தொழில் முயற்சியாலர்களின் பொருட்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் என்றவற்றை உள்ளடங்களாக ஓர் கண்காட்சி நடைபெற்றது.

இதன் முக்கிய தொனிப் பொருளாக மக்கள் காரைநகரை நோக்கி அதாவது ஊர் திரும்ப வேண்டும் என்றால் காரைநகர் எவ்வாறு வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும் அல்லது எத்துறைகளில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதனை பிரதிபலிக்கும் ஓர் செயல்பாடாக அமைந்திருந்தது.



காரைநகரில் பல்வேறு இடங்கள் விவசாய நிலங்களாக காணப்படுவதனால் அதனின் பல்வேறு உற்பத்திகளை மேற்கொள்ள முடியும். ஆனால் இன்று வெறுமனே நெல் விவசாயம் மட்டுமே செய்து கொண்டிருக்கின்றனர். நெல் விவசாயம் முடிந்த கையுடன் சிறுதானியங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணைகளை எவ்வாறு மேற்கொள்ளுவது கால்நடைகளை எவ்வாறு பொருளாதார ரீதியில் வளர்ப்பது போன்ற செயற்பாடுகளை கண்காட்சி மூலம் விளங்கப்படுத்தி இருந்தனர்.

ஒரு நாட்டின் பொருளாதார அங்குள்ள கிராம மட்டங்களில் இருந்து கட்டி எழுப்பப்பட வேண்டும் என்பதனையும் கிராமமட்ட பொருளாதார விருத்தி அடைவதனால் நாட்டின் அனைத்து செயல்பாடுகளும் மாற்றமடைவதுடன் பொருளாதாரமும் வளர்ச்சி அடையும் என்பதனை தெளிவுபடுத்தி இருந்தனர்.

இது தவிர பனையில் கிடைக்கப்படும் பல்வேறு உணவுப் பொருட்கள் மற்றும் கைவினைப்பொருட்கள்என்பவனைஏற்றுமதி செய்தல்மற்றும்மனிதபயன்பாட்டிற்குகொண்டு வருதல் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அது தவிர திண்மைக்கழிவு முகாமைத்துவம், அடர்வனம் உருவாக்கல், சுற்றுலா துறையில் வளர்ச்சி, இயற்கை வளங்களை பாதுகாத்தல், உள்ளூர் உணவு உற்பத்தி, சிறுதானிய உணவு உற்பத்தி போன்றனவும் இயற்கை விவசாயம் என்னும் தொனியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.




சிறப்பு நிகழ்ச்சியாக நமது இயற்கை வளமான நன்னீர் மற்றும் நிலத்தடி நீரை பாதுகாக்கும் முறையில் சிறார்களுக்கு சிறப்பு



போட்டிகள் விளையாட்டுக்கள் போன்றவற்றின் மூலம் நிலத்தடி நீரை பாதுகாக்கும் முறையினை விளங்கப்படுத்தி இருந்தனர். இதில் பேராசிரியர் சிறீகந்தராஜா அவர்கள் மற்றும் அவர்களுடைய அணியினரும் சிறப்பாக இருந்தனர்.

கரைநகர சித்தவைத்தியசாலையிலிருந்து வைத்தியர்கள் ஆரோக்கியமான வாழ்விற்கு சிறுதானியங்களின் முக்கியத்துவம் மற்றும் அதனால் ஏற்படும் பயன்கள் தொடர்பாகவும் இன்று தொற்றாத நோய்களிலிருந்து விடுபட நமது உணவுப்பழக்க வழக்கங்களை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பதனையும் சிறப்பாக வெளிப்படுத்தி இருந்தனர்.

கோவில் பொருளாதாரம் எவ்வாறு நமது கிராமிய பொருளாதாரத்தை கட்டி எழுப்புகின்றது என்பதனையும் ஓர் பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நபர் ஒருவர் கோவில் பொருளாதார நடக்கும் சூழலை நோக்கி வருவாராக இருந்தால் அல்லது சூழலில் தனது வாழ்க்கையை நடத்துபவராக இருந்தால் அவருடைய வாழ்க்கை முறை எவ்வாறு திருப்தி அடையும் என்பதனை சிறந்த முறையில் கோவில் பொருளாதாரம் மூலம் வெளிபடுத்திருந்தனர்.


இது தவிர அங்கு பல்வேறு உள்ளூர் உற்பத்தியாளர்களுக்காக சிறப்பு கொட்டகைகள் போட்டு அவர்களுடைய பொருட்களும் காட்சிப் படுத்தப்பட்டு இருந்தது. மேலும் பல்வேறு பழைய உபகரணங்கள் ஆயுதங்கள் போன்றவற்றை சேமித்து வைத்திருக்கும் நபர்களிடமிருந்து பொருட்களைக் கொண்டு வந்து காரைநகர் பண்டைய பொருட்களை காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. போன்றன காட்சிப்படுத்தப்பட்டிருந்தது சிறப்பு அம்சமாக இருந்தது.

இவ்விழாவில் சிறப்பான நிகழ்வாக காலையில் ஒடியல் கூழ் வழங்கப்பட்டது. இதன் சிறப்பு விஷயம் என்னவெனில் ஒடியல் போல் முட்டு முழுதாக இயற்கை உணவாக இருந்தது ஏனெனில் இது எந்தவித ரசாயனம் கலக்கப்படாது இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பனங்கிழங்கில் இருந்தும் கடல் உணவுகளில் இருந்தும் தயாரிக்கப்பட்டது.



மதிய உணவாக சிறுதானிய உணவு வழங்கப்பட்டது. இதில் சாமை சோறுடன் மூன்று கறிகள் வழங்கப்பட்டது. இதில் வந்த அனைவரும் சிறுதானிய உணவின் சுவையின் உச்சத்தை அறிந்தனர். மாலை உணவாக வரகருசி சோறும் கறியும் வழங்கப்பட்டது. இங்கு வந்த அனைவர்களுக்கும் சிறுதானிய உணவின் சுவையையும் அதன் ஆரோக்கியத்தை முற்று முழுதாக பல்லுயிர் நிறுவனத்தினர் வழங்கியிருந்தனர்.

இதில் கிழித்தட்டு, கபடி, கிடுகு பின்னுதல் போன்ற விளையாட்டுகளும் நடைபெற்றது. மாலை நிகழ்வாக கரை நகரில் உள்ள கலை Oகளை பாதுகாக்கும் அமைப்புகளிடமிருந்து பரதநாட்டியம் சங்கீத நிகழ்வுகள் இசைக்கருவிகளின் நிகழ்வுகள் மற்றும் சிறப்பாக உள்ளூரில் இருந்து உருவாகியுள்ள காத்தவராயன் கூத்தும் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து காரைநகர் பட்டறைக்கு ஏற்றால் போல் நீச்சல் போட்டி படகோட்ட போட்டி மற்றும் சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற நபர்களுக்கான கேடயம் வழங்குதல் மற்றும் சான்றிதழ் வழங்குதல் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்று இக்காரைநகர் பட்டறை நிகழ்வானது இனிதே நிறைவுறியது.



# இறுங்கு பயிர்ச்செய்கை முறை

**இறுங்கை 1 × 2 என்ற இடைவெளியில். ஆடி மாதத்தில் நடுகை செய்யலாம்.**

**நட்டு ஒரு மாதத்தில் களை எடுக்க வேண்டும்.**

**வேறு பராமரிப்பு தேவையில்லை நன்றாக விளைந்த இறுங்கு, முற்றி, சிறிய அளவில் வெடித்து உள்ளே வெள்ளை அரிசி போன்று தெரிய ஆரம்பிக்கும். மார்கழி மாதத்தின் இறுதிக்குள் அறுவடை செய்ய வேண்டும்.**



அமுதன்

இறுங்கை பொறுத்தவரை பல இடங்களில் வெவ்வேறு வகையான பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

இறுங்கு என்பது புல்வகையைச் சேர்ந்த பல இனங்களை உள்ளடக்கிய தாவரப் பேரினம். இவற்றில் சில. தானியங்களுக்காகவும், வேறுசில. கால்நடைத் தீவனங்களுக்காகவும் பயிரிடப்படுகின்றன. சில வகைகள் மேய்ச்சல் நிலங்களில் இயற்கையாக வளர்கின்றன.



இது சிறு தானியப் பயிராகும்.

இப்பயிர் உலகம் முழுதும் மிதமான வெப்பம் கொண்ட பகுதிகளில் பயிராகின்றன. இவ்வினங்கள், எல்லாக் கண்டங்களையும் சேர்ந்த வெப்பவலய, குறை வெப்பவலயப் பகுதிகளையும், தென்மேற்கு பசிபிக், ஆஸ்திரேலியா பகுதிகளையும் தாயகமாகக் கொண்டவை.

தற்பொழுது அதிகமான விவசாயிகள் நாட்டுரக இறுங்கு பயிரிடுவதை குறைத்து கலப்பு ரக இறுங்கை பயிரிட்டு கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் நாட்டு ரக மே சிறந்ததாக இருக்கும் காரணம் அதிலிருந்து அடுத்த கட்ட நடுகைக்குரிய விதைகளை சேகரித்து வைத்து நடலாம்.

**வெள்ளை இறுங்கு:**

அரிசியைப் போன்ற தன்மையையும் அதைவிடப் பல சத்துகளையும் கொண்டது. உடலுக்கு அவசியமான புரதம், இரும்பு, கால்சியம், கொழுப்பு, நார்ச் சத்துகள் உள்ளன. சிறுதானியங்களில் குறைந்தளவே குளுக்கோஸ் இருப்பதால், அவை மனிதனை சர்க்கரைநோயிலிருந்து காப்பாற்றுகின்றது.

**சிவப்பு இறுங்கு:**

இவ்வகை இறுங்கு அதிக அளவில் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உணவாகப் பயன்படுகிறது.

பெரும்பாலும் தென் ஆபிரிக்காவில் விளைவிக்கப்படுகிறது இந்த இறுங்கு, தற்போது மழை குறைவாகப் கிடைக்கும் அனைத்து நாடுகளிலும் விளைவிக்கப்படுகிறது.

இது 4 மீட்டர் உயரம் வரை வளரும். 3 முதல் 4 மிமீ வரை சுற்றளவு கொண்டிருக்கும். மற்றும் இதன் இலைகள் மருந்து, எத்தனால் தயாரிக்கப் பயன்படுகிறது.

இறுங்கு அனைத்துப் பகுதிகளிலும் விளைவதற்கு ஏற்றப் பயிர் ஆகும்.

பொதுவாக இறுங்கை 1 × 2 என்ற இடைவெளியில். ஆடி மாதத்தில் நடுகை செய்யலாம்.

நட்டு ஒரு மாதத்தில் களை எடுக்க வேண்டும்.

வேறு பராமரிப்பு தேவையில்லை

நன்றாக விளைந்த இறுங்கு, முற்றி, சிறிய அளவில் வெடித்து உள்ளே வெள்ளை அரிசி போன்று தெரிய ஆரம்பிக்கும்.

மார்கழி மாதத்தின் இறுதிக்குள் அறுவடை செய்ய வேண்டும்.

இறுங்கை பொறுத்தவரை பராமரிப்பு மிக குறைவாகவே உள்ளது நீரும் அதிகளவு தேவைப்படாது.

அமெரிக்காவில் மற்ற தானியங்களைவிட இறுங்கே அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இதில் அதிக மாவுச்சத்து, கொழுப்பு, புரதம் உள்ளதால் சத்தான உணவாகக் கருதப்படுகிறது.

இறுங்கை பயிரிட்டு கால்நடைகளுக்கு தீவனமாக கொடுக்கும்போதும் கால் நடைகளுக்கு அதிகப் புரதச்சத்து கிடைக்கிறது.



# தேங்காய்

நிஷாந்தி பிரபாகரன்

தேங்காய் சார்ந்த ஏற்றுமதித் தொழிலுக்குத் தேவையான தேங்காய் இருப்பு உடன டியாக இறக்குமதி செய்யப்படாவிட்டால், இலங்கை சுமார் 1 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாயை இழக்க நேரிடும்

– இலங்கை தேங்காய் தொழில்கள் சங்கத்தின் தலைவர் ஜெயந்த சமரக்கோன் –

அடுத்த சில மாதங்களில் 200 மில்லியன் தேங்காய்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு இலங்கை தேங்காய் தொழில்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் மாதாந்திர தேங்காய் தேவை 250 மில்லியன்களாக உள்ளது, அதில் 150 மில்லி யன் தேங்காய்கள் உள்நாட்டில் நுகரப்படுகின் றன, 100 மில்லியன் தேங் காய்கள் தொழில் துறையால் பயன்படுத்தப் படுகின்றன.

இலங்கையின் வருடாந்திர தேங்காய் மகசூல்ல், முன்பு சராசரியாக 3 பில்லியன் கொட்டைகளாக இருந்தது, கடந்த ஆண்டு 2.68 பில்லியன் கொட்டைகளாகக் குறைந்தது. இந்த ஆண்டு மேலும் சரிவு ஏற்படும் என்றும், உற்பத்தி 2.4 முதல் 2.6 பில்லியன் கொட்டைகளாகக் குறையும். 2021 முதல் 2024 வரை 700 மில்லியனுக்கும் அதிகமான தேங்காய்களின் விளைச்சல் குறைப்பை சந்தித்தோம் என்றும் 2025 ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடையில் 200 மில்லியன் தேங்காய்கள் பற்றாக்குறை ஏற்படும் என்றும் தேங்காய் ஆராய்ச்சி நிறுவனம் (CSI) கணித்துள்ளது.

தேங்காய் சார்ந்த ஏற்றுமதித் தொழிலுக் குத் தேவையான தேங்காய் இருப்பு உடனடியாக இறக்குமதி செய்யப்படாவிட்டால், இலங்கை சுமார் 1 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாயை இழக்க நேரிடும்.

2023 ஆம் ஆண்டில், தேங்காய் பொருட்கள் ஏற்றுமதி 708 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியது, மேலும் நவம்பர் 2024 இல், நாடு 782 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியது, இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 20% அதிகரிப்பை காட்டியது. ஆண்டு வருவாய் 850 மில்லியன் டொலராக அதிகரிக்கப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது, இது ஆண்டுக்கு ஆண்டு 17% வளர்ச்சியுடன் மிக உயர்ந்த வருமானத்தைக் குறிக்கிறது. துறையின் வருவாய் திறனையும் அது ஆதரிக்கும் வாழ்வாதாரங்களையும் பாதுகாக்க இந்த துறையை நிலைப்படுத்த வேண்டும்.

உள்நாட்டு விநியோகம் மற்றும் ஏற்றுமதி வருவாய் இரண்டையும் அச்சுறுத்தும் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்ள இந்த நேரத்தில் தேங்காய் இறக்குமதி அவசியம் என்பதனால் தேங்காய் பால், தேங்காய், கொப்பரை அல்லது உரிக்கப்பட்ட தேங்காய் இறக்குமதி செய்ய சங்கம் முன்மொழிந்துள்ளது என்றும் சமரகோன் குறிப்பிட்டார்.

இலங்கையில் தென்னை அதிக ஏற்றுமதி தேவை கொண்ட தோட்டப் பயிர். இதுவரை மொத்த தேங்காய் உற்பத்தியில் 75% உள்ளூர் நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த நாட்டில் தேங்காய் உற்பத்தி இன்னும் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு அபிவிருத்தி செய்யப்படவில்லை. நமது நாட்டின் நுகர்வுக்குப் பயன்படக்கூடிய பெருமளவிலான தேங்காய் அறியாமையால் அழிக்கப்படுகிறது.

தேங்காயோ, மாங்காயோ எதுவும் தீடிரென தட்டுப்பாடு ஏற்படுத்தப்படவில்லை.

உணவுத்தட்டுப்பாடு, பஞ்சம் குறித்து முன் கூட்டி எச்சரிக்கபட்டிருக்கின்றது.

உலகின் பிரதான உணவுப்பயிர்களி லிருந்து சிறுதானியங்கள், கிழங்குகளை உண்ண தயார் செய்கின்றார்கள்.

நாம் தான் இன்னும் காலத்துக்கும் சுல்ழலுக்கேற்றபடி அப்டேட் ஆகாமல்அரிசி, தேங்காக்குள் மட்டும் இருக்கின்றோம். அரிசி, தேங்காய்க்கு மாற்றான உணவுதிட்டங்களை தேங்காய்நுகர்வுமூலம் அதிகபட்சநன்மைகளை எவ்வாறு பெறுவது என்பதை குறித்த விழிப்புணர்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள தேங்காய் நெருக்கடிக்கு பல காரணங்கள் உள்ளன:

**1. ‘எல் நீனோ’**

புவி வெப்பமாதலின் காரணமாகப் ஒழுங்கற்ற காலநிலை மாற்றங்கள். ஒரு பக்கம் அதி கனமழை வெள்ளம், மற்றொரு பக்கம் குறைந்த சராசரி மழைப்பொழிவு மற்றும் சுட்டெரிக்கும் வெயில் வறட்சி என வெப்பநிலை மாற்றங்கள் பயிர்களின் இயற்கையான வளர்ச்சியை குழப்பி, விளைச்சலை பாதிக்கிறது. சிறந்த வளர்ச்சி மற்றும் காய் உற்பத்திக்கு சீரான கால நிலையும் நீரும் தேவைப்படுகிறது.

**2.தவறான அரசாங்க கொள்கைகள்:**

தற்போதைய தேங்காய் பற்றாக்குறைக்கு முந்தைய அரசாங்கத்தின் உரங்களை தடை செய்யும் முடிவு தேங்காய் உற்பத்தியில் பாதிப்பை விளைவித்தது. உரச் செலவுகளில் ஏற்பட்ட கூர்மையான அதிகரிப்பு – 50 கிலோ பைக்கு ரூ. 1,500 முதல் ரூ. 12,000 வரை – உரங்களைப் பயன்படுத்தும் விவசாயிகளை 10% க்கும் குறைவாகக் குறைத்ததும் விவசாயிகள் போதுமான அளவு தேங்காய் பயிர்களை வளர்ப்பதை ஊக்கப்படுத்தவில்லை

இயற்கை உர விவசாய நடைமுறைகள் நிலையானவை என்றாலும், அவை சிறந்த முடிவுகளைத் தர நேரம் மற்றும் நிபுணத்துவம் தேவைப்படுகிறது.

**3. பொருளாதார நெருக்கடி:**

பொருளாதார நெருக்கடி, விலையேற்றம் உரம் மற்றும் புல்ச்சிக்கொல்லிகள் போன்ற அத்தியாவசிய உள்ளீடுகளின் விலை உயர்வு விவசாயிகளுக்கான செலவுகளை அதிகரித்து விளைசாசலை பாதித்துள்ளது.

**4. புல்ச்சி மற்றும் நோய் தொற்றுகள்**

தென்னை மரங்களை சேதப்படுத்தி, அவற்றின் உற்பத்தித்திறனை குறைத்துள்ளன.

**5. ஏற்றுமதிக்கான தேவை:**

உலகின் முதல் தர தேங்காய் ஏற்றுமதியாளர்களான இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் தமது உள்நாட்டில் தேங்காய் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.இதனால் தேங்காய் எண்ணெய் மற்றும் உலர்ந்த தேங்காய் போன்ற தேங்காய் பொருட்களுக்கான உலகளாவிய தேவை அதிகரித்துள்ளது, இது உள்நாட்டுவிநியோகத்தில் கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேளவடந , ஊடீடு போன்ற நிறுவனங்கள் தேங்காய் உள்ளீடுகளைக் கொண்டு உற்பத்திப் பொருட்களை அதிகளவில் ஏற்றுமதி செய்கின்றன. இது நாட்டுக்கு நன்மை பயப்பினும் தேங்காய் தட்டுப்பாட்டை இன்னும் அதிகரிக்கிறது.

இவ்வாறான காரணங்களால் தேங்காயின் உற்பத்தி குறைந்து , தேவைகள் அதிகரித்து , விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

நுகர்வோருக்கான தேவைகள் குறையும் போது தேங்காய்க்கான தட்டுப்பாடும் குறையும்.

அதனால் தேங்காய்ப்புல் போட்டு புட்டவிச்சி, தேங்காய் சம்பலும், தேங்காய்ப்பால் சொதியும் தான் தின்போம் என அடம்பிடிக்காமல் மாற்றியும் யோசிப்போம்.

பதிவு தொடரும்..

# வருவாய் தரும் வெட்டிவேர், இலங்கையிலும் பயிரிடலாம்!



வெட்டிவேர் பயிர் செய்யும் இடத்தைக் கோயில்கள் போன்ற தெய்வீக இடமாகக் கருத வேண்டும். கோயிலுக்குச் செல்வதைப் போலவே உடல் சுத்தமாக வெட்டிவேர் செய்யும் இடத்துக்கு உரிமையாளர் முதல் தொழிலாளிகள் வரை வர வேண்டும்.

மற்ற விவசாயம்போல வெட்டிவேர் விவசாயம் இல்லை. விதைகள், காய்கள், புல்க்கள் எதுவும் கிடையாது. வெட்டி எடுக்கப்படும் வெட்டிவேர் தழைகளைக் கொண்டு, மீண்டும் பதியம் போட்டு பயிர் செய்ய வேண்டும். நல்ல மண் வளமும், நீர் வளமும் இருக்கும் இடங்களில் மட்டுமே இதைச் சாகுபடி செய்ய முடியும். இலங்கையிலும் பார்க்க இந்தியாவிலேயே அதிகமானோர் வெட்டிவேர் விவசாயம் செய்கின்றனர்.



அந்த வகையில் நாகை மாவட்டம் கொள்ளிடம் ஆற்றின் கரையோரக் கிராமங்களான தில்லைமங்கலம், சந்தைப்படுகை, மாங்கனாம்பட்டு, ஆச்சாள்புரம், எடமணல் உள்ளிட்ட கிராமங்களில் தோட்டக்கலைப் பயிராக வெட்டிவேர் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியைச் சேர்ந்த குறு விவசாயிகள் வெட்டிவேர் சாகுபடியில் குடும்பத்தினரோடு ஈடுபட்டு வருவாய் ஈட்டி வருகின்றனர். வெட்டிவேர்

பரம்பரை பரம்பரையாக இந்தச் சாகுபடியை விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் சில விவசாயிகள் செய்து வருகிறார்கள். உலகளவில் பரந்துபட்ட பல தேவைகளுக்கு வெட்டிவேர் தேவைப்படுவதால் இலங்கையிலும் வெட்டிவேர் விவசாயத்தை சேருவதற்கு போதிய வாய்ப்புகள் இருக்கிறது என்று நினைக்கிறேன்.

ஆதிகாலங்களில் பெண்கள் இந்த வேரை விரும்பி தலையில் அணிவார்கள். இதனால் கூந்தல் மணம் பெறும். வெட்டிவேர் குளிர்ச்சி உண்டாக்கி; பித்தம் அடக்கி. பித்தத்தால் உண்டாகிற குருதி அழல் (டீஷ்ஷ), சர்க்கரை நோயால் ஏற்படுகிற நீர் வேட்கை, மயக்கம் மற்றும் நரம்பில் ஏற்படுகிற வலிகளுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. வெட்டிவேரை தைலமாகவும் தயாரித்து பயன்படுத்தலாம்.

### வெட்டிவேர்

இந்த பயிர் செய்கை குறித்து வெட்டிவேர் விவசாயி பன்னீர்செல்வத்திடம் பேசினோம்.

ஹஹபல தலைமுறைகளாக வெட்டிவேர் செய்து வருகிறோம். வெட்டி வேர் தழையைப் பதியம் போட்டு நடவு செய்த 90 நாள்களில் அறுவடை செய்யலாம். நடவு செய்த நாள் முதல் தினமும் தண்ணீர் விட்டுக்கொண்டே இருக்க வேண்டும். நடவு செய்த 20-ம் நாளில் கடலைப் புண்ணாக்கைத் தூளாக்கி உரமாக வைப்போம். மீண்டும் அதுபோல் 40-ம் நாளில் உரமிடுவோம். தழைகளில் புல்ச்சி தென்பட்டால் மட்டுமே புல்ச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்துவோம். பெரும்பாலும் புல்ச்சிக்கொல்லி மருந்து தேவைப்படாது. இத்தொழிலை அறிந்தவர்கள் மட்டுமே செய்ய முடியும். பெரும்பாலும் குனிந்தபடியே வேலை செய்ய வேண்டியிருப்பதால், இத்தொழிலைச் செய்பவர்களுக்கு இடுப்பு வலி தொந்தரவுகள் அதிகமாக ஏற்படும். தாத்தா, அப்பா இவர்களுக்குப் பிறகு இன்று நான் இத்தொழிலில் இருக்கிறேன். ஆனால், நாளை என் வாரிசுகள் இத்தொழிலைச் செய்வார்களா என்று தெரியவில்லை. ஏனென்றால், நாங்கள் படும் அவதியை அவர்கள் நேரில் கண்டு வருத்தப்படுகிறார்கள்.

வெட்டிவேரை வாங்கிப் பல இடங்களுக்கு விற்பனைச் செய்வதற்கு ஒருவர் மட்டும் ஏஜென்ட் போல இருக்கிறார். நாங்களெல்லாம் நேரடியாகவே சென்னை, கேரளா, முக்கியமாக சிதம்பரம் போன்ற கோயில்களுக்கு விற்பனை செய்திடுவோம். வாசனைத் திரவியங்கள் தயாரிப்பு மற்றும் சித்த மருத்துவப் பொருள்கள் தயாரிப்பில் முக்கிய மூலப்பொருளாக வெட்டிவேர் திகழ்கிறது. மேலும் ஹெர்பல் பொருள்கள், ஊதுபத்தி தயாரிப்புக்கும் வெட்டிவேரை தேடி வந்து வாங்கிச் செல்கிறார்கள். 50 சென்ட் நிலத்தில் இதைச் சாகுபடி செய்ய ரூ.25,000 செலவாகும். அதே அளவு லாபமும் கிடைக்கும்.

### வெட்டிவேர்

அழிந்து வரும் இந்த விவசாயத்தை நாங்கள் மட்டுமே செய்து வருகிறோம். இதைக் காப்பாற்ற அரசு தரப்பிலிருந்து எவ்வித உதவியும் செய்வதில்லை. குறிப்பாக, எங்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க வேண்டும் என்று பலமுறை வேண்டுகோள் விடுத்தும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பதில் எங்களுக்கு மிகவும் வருத்தம் உண்டு. விவசாயத்துக்கு இலவச மின்சாரம் வழங்கும் அரசு அரிய வகை சாகுபடிச் செய்யும் எங்களுக்கும் வழங்கினால் என்ன? இப்போது அறுவடைக்காலம் கொரோனா ஊரடங்கால் அறுவடை செய்த வெட்டிவேரை விற்பனை செய்ய முடியாமல் நாங்களும் முடங்கி இருக்கிறோம். ஆனால், இது ஒரு தெய்வீகப் பொருள். இதை உற்பத்திச் செய்யும் பாக்கியத்தை ஆண்டவன் எங்களுக்கு அளித்திருக்கிறான். இதை என் இறுதி மூச்சு வரை செய்வேன்' என்றார்.

# குலை குலையாய் முந்திரிக்காய் (மரமுந்திரிகை பயிர்ச்செய்கை)

கடும் வறட்சியை தாங்கும் முந்திரியை பயிரிட்டால், தொடர்ந்து 25 முதல் 30 ஆண்டுகளுக்கு, வருமானம் கிடைக்கும்.ஏக்கருக்கு, ஒரு போகத்தில் 7 லட்சம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம்' என்கிறார்கள் விவசாயிள்.25 - 30 ஆண்டுகள்வரை,நிலையானவருமானத்தை தரும். மேலும், கடும் வறட்சியை தாங்கி வளர்வதுடன், வடிகால் வசதியுடைய எல்லா வகை மண்ணிலும் இதை பயிரிடலாம்.ஆனால் மணல் சார்ந்த மண் சிறப்பாக இருக்கும்.ஏக்கருக்கு, 170 கன்றுகள் வீதம், ஜூன் - டிசம்பர் மாதங்களில், நல்ல தெரிவுசெய்யப்பட்ட இனக் கன்றுகள் அல்லது ஒட்டுக்கட்டிய முந்திரி கன்றுகளை நடுகை செய்யலாம்.



### நடவு செய்யும் முறை

45 செ.மீ., நீள, அகல, ஆழ அளவிற்கு குழிகள் தோண்டி நடவேண்டும். ஒவ்வொரு குழிக்கும், 16 அடி இடைவெளி விட வேண்டும்.அக்குழியில், 10 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது மாட்டுச்சாணம் மற்றும் கோழி எரு கலந்து, குழியில் நிரப்பி, 3 - 6 மாத வயதுடைய, முந்திரி கன்றை நடவேண்டும்.

### தண்டுத்துளைப்பான்

முந்திரிகையில், 'தண்டுத்துளைப்பான்' தாக்குதல் அதிகம் இருக்கும். சரியாக கவனிக்காமல்இருந்தால்,அப்புழுதாக்கப்பட்ட மரங்களின் இலைகள் உதிர்ந்து, மரம் மொட்டையாக காட்சியளிக்கும்.ஆண்டிற்கு, இருமுறை,மழைகாலத்தின்முன்பும்,பின்பும் மரத்தின் அடித்தண்டில் தரையிலிருந்து, 3 அடி வரை மண்ணெண்ணெய் மற்றும் தார் கலவையை புல்சினால், இப்பிரச்னை தீரும்.



### அறுவடை மற்றும் விளைச்சல்

கன்றுகள் நட்ட, மூன்று ஆண்டுகளுக்கு பின்பே, முந்திரியை அறுவடை செய்ய முடியும். எனவே, இடைப்பட்ட காலத்தில் பப்பாளி, சர்க்கரை வள்ளி, உளுந்து, பச்சை பயறு, கச்சான், எள் போன்றவற்றை, ஊடுபயிர் செய்து, கூடுதல் லாபம் பெறலாம்

போதுமானளவு நீர் ஊற்றி வந்தால் சிறிய மரமாக இருக்கும் போதே காய்க்க ஆரம்பிக்கும்.காய்க்க ஆரம்பித்த முதல் ஆண்டில் வருமானம் சற்று குறைவாகவே இருக்கும்

அடுத்த ஆண்டுக்கு, 1 ஏக்கருக்கு, 3000 கிலோ முந்திரிக்கவிதைகள் வரை கிடைக்கும். 1 கிலோ, இலங்கையில் 250 தொடக்கம் 300 ரூபாய்க்கு விற்றால் கூட, ஏக்கருக்கு, 7.5 தொடக்கம் 9 லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கும்.

சிறந்தமுறைபயிற்செய்கையாகஇருந்தால் மட்டுமே இந்த லாபம் கிடைக்கும்.

இருப்பினும்மரமுந்திரிகைமரமானதுமற்ற பயிர்கள் போன்று அல்லாமல் பராமரிப்பு மிகவும் குறைவாகவே இருக்கும்.இது வறட்சியைத்தாங்கிவளரும்பயிர் என்பதால் மணல் பாங்கான இடங்களிலலும் மற்றும் நீர்தட்டுப்பாடுஉள்ள பிரதேசங்களில்உள்ள விவசாயிகள் தயங்காமல் மரமுந்திரிகை பயிற்செய்கையை மேற்கொள்ளலாம்.

முந்திரிப்பழத்தை தண்ணீரில் போட்டு அரைமணி நேரத்துக்குப் பிறகு, பழத்தைத் தனியாக எடுத்துவிட்டு தண்ணீரைக் குடித்தால், உடல் எடை குறையும்.

கரோட்டின் சத்து இருப்பதால், பார்வைத் திறன் மேம்படும். நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். முந்திரிப்பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், எலும்புகள் பலமாகும். தசைகளை நன்றாகச் சுருங்கி விரியச் செய்யும். இதயத்துக்கு நல்லது.

முந்திரிப்பழத்தை அவ்வப்போது சாப்பிட்டு வருவது, தோலுக்குநல்லது. முந்திரிப்பழத்தை பறித்த 24 மணி நேரத்துக்குள் பயன்படுத்திட வேண்டும். இல்லையெனில் அழுகிவிடும்.

முக்கியமாக வைட்டமின்-சி ஆரஞ்சு பழத்தை விட, முந்திரிப்பழத்தில் ஐந்து மடங்கு அதிகமுள்ளது. வைட்டமின்-சி மனித உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகின்றது. ஈறுகளில் ஏற்படும் ரத்தக்கசிவு நோயை குணமாக்குகின்றது.


மனிதர்களை அச்சுறுத்தும் நீரிழிவு, ரத்த அழுத்தத்தைச்சரிசெய்யும்தன்மைஉடையது. பற்கள், நகங்களை உறுதிப்படுத்துகின்றது. ஸ்கர்வி என்ற வைட்டமின்-சி குறைபாட்டை களைகிறது. மேலும், கிருமி நாசினியாக செயல்பட்டு தொற்று வியாதிகளை குணமாக்குகிறது.

முந்திரிப்பழத்தில் புரதம், பீட்டோகரோட்டின், நார்ச்சத்துகள் நிறைந்துள்ளன. டானின் உள்ளதால் ஆன்டி ஆக்ஸிடன்ட் ஆகவும் செயல்படுகிறது.

# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.01.2025 இல் வெளியிடப்பெற்றது.